பாலவித்யா

தொகுதி 1 பகுதி 4

ஏப்ரல் 1930

Regd. No. M. 2573



# விஞ்ஞாபனம்

செந்தமிழ்ச் செல்வர்காள்! நந்தம் பாலவித்யா முந்திய பகுதிகள் நுந்தம் பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறதன்றோ? அதனை நும் அரிய காலத்திற் சிறிதளவேனும் செலவழித்துப் படித்துப் பார்த்திருப்பீர்களென்றே நம்புகிறோம். இதுவரையில் நீவிர் அப்படிப் படிக்க முடியாதிருப்பினும் இனியாகிலும் தயவுசெய்து அவைகளையும் இப்பகுதியையும் படித்துப் பார்த்துச் சந்தாதாரராகச் சேரவும், தம் நண்பர் முதலாயினோர்க்கு எடுத்துச் சொல்லி அவர்களையும் சந்தாதாரராகச் சேரச் செய்யவும் பெரிதும் வேண்டிக்கொள்கிறோம்.

பாலவித்யா பரந்த பல நன்னோக்கங்களைக் கொண்டு ஆரம்பிக்கப் பெற்றிருக்கிறதென்பதை **வேண்டுகோள்** என்னும் தலைப்புப் பாடலாலே நாடறியச் சொல்லியுள்ளோம். எந்த நோக்கமும் மக்கள் பலருடைய ஆதரவைப் பெற்றாலன்றி நாட்டிற்பரவி நன்மை பயக்கும் நிலையை அடைய முடியாது. இதனை நீவிரும் உணர்ந்தே இருப்பீர். ஆகவே சந்தாதாரராகச் சேர்தலிலும் சேர்வித்தலிலும் மிக்க விரைவும் ஊக்கமுங் கொள்வீராயின் நம் நாட்டுக்கு எங்களை நல்ல தொண்டராக்குதலாகிய நற்காரியத்தைச் செய்தவர்கள் ஆவீர். எங்கள் தொண்டும் பல் நல்வழிகளிலே பரந்து பயன் தருவதாகும்.

"ஒன்றே செய்யவும் வேண்டும்; ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும்; நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும்; இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும்."

(கபிலர்)

பதிப்பாளர்கள்.

---

N.B.—சந்தா தொகையை அனுப்பி சந்தாதாரராக சேருபவர்கள் தமக்கு கிடைத்த பகுதிகள், கிடைக்கவேண்டிய பகுதிகள் விபரம் தெரிவிக்கவும்.


# பால வித்ய[illegible]

(மாதப் பத்திரி[illegible]


188[illegible]

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல[illegible]
கல்லார் அறிவிலா தார்"
"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அ[illegible]
மெய்ப்பொருள் காண்பது அறிவு"


| தொகுதி I | 1930 வரு ஏப்ரல்மீ<br>பிரமோதூதவரு சித்திரைமீ | பகுதி IV |
| --- | --- | --- |


## தன்னயங்கருதாமை.

கடலூர்,

தமிழாசிரியர், ஸ்ரீமான் T. A. ஸ்ரீநிவாஸாசாரியார் எழுதியது.

மனிதர்களாகப் பிறந்தவர்கள் அடையவேண்டிய அருங்குணங்கள் பலவுள. அவ்வருங்குணங்களைக் கைவரப்பெற்று நன்மை அடைந்தவர்கள் பலர் உண்டு. இக்குணங்கள் யாவும் ஒருவர்க்குச் சிறுபருவத்திலிருந்தே வளருதல் அவசியம். இளமையில் ஒரு குணத்தை நாம் அடைந்துவிடுவோமாயின் அது பசுமரத்தாணிபோல் பதிந்து வாழ்நாள் முழுவதும் தங்கும். அதுபற்றியே "தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்னும் பழமொழியும் வழங்குகிறது.

நாம் அடையவேண்டிய பலவித நற்குணங்களுள் சிறந்தது தன்னயம் கருதாமை. எந்த மனிதனும் தன்னுடைய நன்மைமட்டில் நாடுதல் கூடாது என்பதே இதன் பொருள். எவரும் தனக்கென வாழாமல் பிறர்க்குரியராக இருத்தல் வேண்டும் என்பர் பெரியோர். அன்னணம் இருப்பவர் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர் என வியந்து அழைக்கப்படுவர். சில விலங்குகள்கூடத் தம் இனத்தைக் காக்குநிமித்தம் தாங்கள் உழைக்கின்றனவாம். விலங்குகளைவிடப் பன்மடங்கு சிறந்திலங்கும் நாம் பிறர் நன்மையைநாடிப் பாடுபடாமலிருப்போமாயின் அது நகைப்புக்கு இடமாகுமன்றோ! உலகத்திலிருந்து நாம் எவ்வளவு உதவியை எதிர்பார்க்கின்றோமோ அஃதேபோல் உலகும் நம்மிடமிருந்தும் எதிர்பார்க்கின்றது.

[illegible]ன்கண் தோன்றும் பலவிதப் பொருள்களினிடத்தும் இவ்[illegible]மை மிளிர்வதைக் கண்ணுறல் கூடும்! நாடோறும் குறித்தநேரம் தாழ[illegible]ல் மேகம் சூழ்ந்து தடுப்பினும், பனி மூடிப்புதைப்பினும், குறித்த இ[illegible]த்தே தோன்றி ஒளிர்ந்து மறையும் கதிரவனைக் காணுங்கள். சூ[illegible]ன இவ்வுலகிற்கு எத்தனை நன்மை புரிகின்றது. அஃது உலகினி[illegible]மிருந்து கைம்மாறு ஏதேனும் எதிர்பார்க்கிறதோ? பருவ[illegible]ண்டு [illegible]வேண்டுமளவு பொழிந்து பயிரை வளர்த்துப் பலனை [illegible]ழ, நம்மிடம் யாதேனும் உதவி நயக்கின்றதோ? இன்றே! இவைபோலத்தான் கடவுளும், பிரதிபயன் சிறிதும் நாடாது படைத்துக் காத்துவருகின்றார். தன்னை ஒப்பவே தன் மகனும் நற்குணமுடையவனாயிருக்கக் காணிலன்றோ தந்தை மகிழ்வான். படைப்புண்டவற்றுள் சிறந்த நாம், இந்நயங்கருதாவழி நடப்பின் அன்றோ படைத்த இறைவன் உவப்பான். இனி இச்சிறப்புவாய்ந்த குணங்களைப் பெற்று நலம் புரிந்த ஒரு சிறுவனது சரிதையைக் கவனிப்போம்.

ஒரு கிராமத்தில் ஒரு குடியானவன் இருந்தான். அவனுக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உண்டு. அச்சிறுவன் கல்வியறிவு உடையவனல்லானாயினும் இயற்கையறிவு நிரம்பியவன். அப்பிள்ளை சிறுவயதிலேயே தன் ஆற்றலுக்கு இயைந்த அளவு அவ்வூரார் யாவருக்கும் நன்மைசெய்ய நாடுவன். அற்பப்பிராணிகளுக்கும் ஓர் இடையூறு நேர்ந்திருப்பதைக் கண்டால், தன்னாலியன்றவரையில் பரிந்து நீக்க முயலுவன். உண்மையான அறிவினுக்கழகு உதவியாற்றுதலேயன்றோ! ஆதலின் அவ்வூரார் அனைவரும் அவனைத் தம் புதல்வனே போல் நேசித்துவந்தனர்.

அவ்வூரில் ஒரு பெரிய ஏரி உண்டு. மழைகாலத்தில் அக்கிராமத்தார்கள் அவ்வேரி நிறையத் தண்ணீர் தேக்கிவைப்பர். புத்தியின் சக்திக்கேற்ப கல்வி மனத்துள் தங்குவதேபோல் கரையின் பலத்திற்கேற்பத்தானே ஏரியில் நீர் நிற்கும். ஆதலின் அவ்வூரார் அன்றாடம் அவ்வேரிக்கரையில் நேரும் பழுதினைச் செம்மைப்படுத்துவர். அவ்வேரிக்கரைக்கு அப்பால் ஒரு சிற்றூர் உண்டு. இச்சிற்றூரில் முற்கூறிய சிறுவனுக்கு உறவினர் வசித்துவந்தனர்.

இங்ஙனமிருக்க, ஒருமுறை விடாமழைபொழிய, அவ்வேரியில் நீர் நிரம்பியது. அதிக நீர்ப்பெருக்கைக் கழிக்குநிமித்தம் மதகுகளின் வாயினைக்கிழித்துப் பேரொலியிட்டுக்கொண்டு 'ஒல்கிய ஒழுக்கினர் வேதவரம்பு மீறுவதேபோன்று' வாய்க்கால்களின் கரைகளைக்கடந்து புனலோட்டம் பாய்ந்து பரந்தோடியது. ஏரிக்குள்ளிருந்த ஜலம், தன் அலைகளாகிய கைகளால் தன்னைச் சிறைப்படுத்திய கரைகளை மோதிற்று. எப்பக்கத்தின் கரையிலேனும் சிறிதளவு துவாரம்



தோன்றின் அதன் வழியே உடைப்பு நேர்ந்து, கோளர்கள் உதவிகொண்டு குடும்ப ஒற்றுமையைக் குலைப்பதுபோல ஊரினைப்பாழாக்கும் நிலைமையில் நீர்ப்பெருக்கு முயன்றுகொண்டிருந்தது. அவ்வூரிலிருந்தார் உள்ளத்தில் அவ்விரவெல்லாம் எங்கு ஏரி உடைத்தெழுந்துவிடுமோ என்ற அச்சமே குடிகொண்டிருந்தது. இத்தகைய இடுக்கணுற்றுள்ள அத்தினம் காலையில் முற்சொல்லிய சிறுவன், தன் உறவினர் இல்லத்திற்கு ஓர் அலுவலாகச் சென்றிருந்தான். அவன் அன்று மாலையில் தன் வீடு திரும்புவதாகச் சொல்லிச் சென்றான், சென்ற இடத்திலிருந்து சூரியாஸ்தமனத்திற்குள் திரும்பமுடியவில்லை.

பொழுதுபட்டுச் சிறிது நேரம் சென்று தன் உறவினர்பால் அரிதில் விடைபெற்றுத் தன்னூர் நோக்கி நடந்துவரலானான். சந்திர வெளிச்சம் அன்றில்லை. வானில்தோன்றிய நக்ஷத்திரங்கள் இச்சிறுவனிடம் இரக்கங்கொண்டு வழிகாட்டுவனபோல் தம் சிற்றொளியினை விட்டுவிட்டு வீசிக்கொண்டிருந்தன. இருட்செறிவால் பையன் விரைந்தோடக்கூடாமல் பையப்பைய வழிநடவலானான், வழியினிடையே இரவில் அலரும் நறுமலர்களைக் காணுந்தோறும் இப்புது நறுமலர்கள் நம் உடன்பிறந்தாளுக்குதவுமெனக் கொய்து கொய்து கை நிரம்ப எடுத்து நடத்தல் மேவினன். இவ்வண்ணம் இவன் ஏரிக்கரையை எய்தி அதன்மீது நடக்கத் தொடங்கினான். பெற்றோர் என் வரவினைப் பெரிதும் எதிர்பார்த்திருப்பரே என அடிக்கடி ஏங்குவான். கடலென்ன நீர்மலிந்த அவ்வேரியின் தோற்றத்தைக் கண்டு நெஞ்சங்கலங்குவான். வர வர இருள் மிகுவதைக்கண்டு மனங்குழம்புவான். சிற்றொளிகளாலும் உடுத்தொகுதிகளை நோக்கிச் சிறிது தேறி நடப்பான். இவ்விதமாக அவன் அக்கரையின் பாதிவழி வந்துகொண்டிருந்தான்.

அப்போது அம்மையிருளில் 'சல சல' வென்னும் ஒரொலி அவன் செவிப்பட்டது. கேட்டதும் அவ்வொலி யாதாயிருத்தற்கூடுமென்று சற்று ஆலோசித்து, அச்சப்தம் உண்டாகுமிடத்தைக் குறித்துச் சென்றான். அவ்வேரிக்கரையின் அடிப்புறத்தில் ஒரு சிறு துவாரத்தின்வழியே ஜலம் அதிக வேகமாக வெளிப்பட்டுக்கொண்டிருப்பதைக் கண்டான். மண்கரையாதலால் ஜலம் வரவரத் துவாரம் பெரிதாகிக்கொண்டேயிருந்தது. இப்படியே அன்றிராமுழுவதும் நிகழுமாயின் அப்பாகத்தில் ஒரு பெரும் உடைப்பு நேர்ந்து ஊர் பாழ்படவேண்டியதுதான். இதனை எண்ணிய அச்சிறுவன் மனம் வெய்துயிர்த்தது. 'என்னே! இராக்காலமாகவும், காரிருளாகவும் உள்ளதே! ஊரார் ஒருவரும் இங்குவரக் காண்கிலேன்! நம் பெற்றோர்கள் நம் வரவைப் பெரிதும் நாடியிருப்பரே. இந்நீர்ப்புழையோ விரைவிற் பெரிதாகிக்கொண்டு வருகிறதே. நம் ஊர்போய் இதனைத் தெரிவி

த்து மீளுவதற்குள் இப்புழை அடைக்க இயலாதபடி பெரிதாகி உடைத்துக்கொள்ளுமே அப்பால் இதனைச்சார்ந்த பல ஊர்களும், உயிர்களும் பாழ்படுமே. இப்போது என் செய்யலாம்' என்று தன்னுள் எண்ணமிடலானான். தன் கைகளிலிருந்த மலர்களைத் தூரத்தேபோட்டு அத்துவாரத்தைச் சிறு கற்களையும், மண்ணையுங்கொண்டு அடைத்துப் பார்த்தான் பயன்படவில்லை. பின்னர் அம்மகன் பிறரனைவரும் பெருந்துன்பத்துக்கு ஆளாவதினும் நாம் ஒருவன் ஈண்டுச்சிறிது துன்புறுதல் மேலானதே என்று தீர்மானித்து அப்புழையைத் தன் கையால் நெடுநேரம் அடைத்துக்கொண்டிருந்தான். கைகள் இரண்டும் உணர்ச்சியற்றுப்போயின. பின்னும் நீர் பெருகிவரக்கண்ட அவன் தன் கால்களால் வெகுநேரம் அடைத்திருந்தான். கால்களும் குளிர்ச்சியால் விறைத்தன. தேகம் குளிரால் நடுங்கலாயிற்று, மனத்திடமுள்ள அச்சிறுவன் இவற்றைச் சற்றும் பொருட்படுத்தவில்லை. இப்படியே நடுநிசியாயிற்று. நம்மனைவரையும் ஆபத்துக்குட்படுத்திக்கொண்டு இனி ஊர் செல்வதில் பயனில்லை என்று நினைத்துத் தன் முதுகினால் அடைத்தபடியே ஆண்டு உட்கார்ந்துவிட்டான. உட்கார்ந்து முதுகினால் அடைத்ததும் ஜலம் முன்போல் அவ்வளவு சீக்கிரமாகக் கரையைக் கரைக்கவில்லை. இப்படி விடியுமட்டும் அவன் அங்கு அமர்ந்திருந்ததால், உடல் முற்றிலும் நளிர்ப்பெய்தி அவயவங்கள் இயக்க இயலாவண்ணம் விறைத்து மெய்மறந்துவிட்டான். என்றாலும் ஊரார்க்கு நேரவிருந்த பெருவிபத்தினை நீக்கியமையால் ஓர் உள்ள நிறைவை அவன் அடையாமலில்லை.

பொழுது புலருகையில் அவ்வூரினர் பலர் ஏரியின் கரை நிலைமையைக் காண ஆவலோடு சோதித்துவருகையில் ஓரிடத்திற் ஒரு பிள்ளை உடலம் விறைத்து உட்கார்ந்திருப்பதையும் கரையினின்றும் சிறுகச்சிறுக நீர் பெருகிவடிவதையும் கண்டு, அருகிற்சென்று உற்றுணர்ந்து அவ்வுடைப்பினை அடைக்கச்செய்து, அப்பிள்ளையை ஊருக்குத் தூக்கிச்சென்றனர். சென்று கனலுதவியால் குளிர் நீக்கி, சூடான சிற்றுணவுதந்து, களையாற்றிய பின் அம்மகனால் அனைத்து நிகழ்ச்சிகளையும் அறிந்தனர். அப்பிள்ளைக்கு அவ்வூரதிகாரியும், குடிகளும் பல பரிசில்கள் நல்கியமையோடு அவனைத் தெய்வமாகக்கொண்டாடி முன்னினும் பன்மடங்கு நேசித்துவந்தனர்.

தன்னலம் கருதுபவர் எவராலும் வெறுக்கப்படுவர். அப்பிசாசினுக்கு நம்மனத்துள் இடந்தரலாகாது. நாம் சுயநலப்பிரியர்களாக இல்லாமல், இயலுந்தனையும் பரநலம் கருதுவோமாயின் இம்மையில் எவராலும் போற்றப்பட்டு, மறுமையில் கடவுளாலும் சன்மானிக்கப் பெறுவோம்.

Copyright Reserved by the Author.

பிறந்துவிட்டோம் என்ற ஒரு காரணத்தால், நீ என் பெண்ணை யடைவது முடியாத காரியம் என்று கவலை கொண்டுவிட்டாய். சபேசா! உலகத்தில் பணமே பிரதானம் என்று நினைத்துக்கொண்டிருக்கும் பேதைகளில் நான் ஒருவனல்லன். இன்னும் அவளை அடைய உனக்கு எவ்வித பாத்தியமுமுண்டு. அன்று அவள் ஆபத்தில் மாட்டிக்கொண்டதும், நீ காப்பாற்றாமலிருக்கும்பக்ஷத்தில், அவளுடைய கதி என்னவாயிருக்கும்? அப்பா! நீ அவளைக் காப்பாற்றியதை அறிந்து, பிறகு உன்னை நேரில்கண்ட அதேநிமிஷம், நீ செய்த காரியத்திற்கு, அவளை உனக்குப் பரிசாகக் கொடுக்கத் தீர்மானித்தேன். அதுவுமன்றி, புருஷனாய்ப் பிறந்த ஒருவனுக்கு, இப் பணத்தைத் தவிர இருக்கவேண்டிய மற்ற எல்லா நற்குணங்களும் உன்னிடமிருப்பதால், நீ அவளை அடைய, எவ்விதத்திலும் அருஹனென்பதை அறிந்துகொள். சரி இருக்கட்டும். கூடிய சீக்கிரம், உங்களுடைய விவாஹத்தை நடத்திவிடுகிறேன்." என்று சொல்ல, சபேசன், மிகவும் மரியாதையுடன்,

"இங்கு, நான் மிகவும் வணக்கத்துடன் சொல்லிக்கொள்ளவேண்டியது ஒன்றுண்டு. அதாவது, எனக்குக் குறைப்பட்ட தங்கை ஒருவளுண்டென்பதைத் தாங்களறிந்திருக்கிறீர்கள். நான் எப்படியாவது அவளுக்கு மறுவிவாஹம் செய்துவைத்தபிறகே, என் விவாஹத்தைப் பற்றி யோசிப்பதென்று சபதம் செய்துகொண்டிருப்பதால், அதை நான் செய்துமுடிக்கும் வரையில் எங்கள் விவாஹத்தை ஒத்திப்போடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்." என்றான். தாண்டவம்ஐயர்,

"அப்பா! அதைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம். ஏற்கனவே, அவளைப் பற்றிய பல யோசனைகள் என் மனதிலுண்டு." என்றார்.

* * * * *

மேற்சொன்ன சம்பவம் நடந்த மூன்றாவது நாள் மாலை ஆறுமணி இருக்கும். சபேசன், தன் வீட்டு வாச

வில் வெளியில்போகத் தயாராய் நின்றுகொண்டிருந்தான். அச்சமயம், நம் கோபாலய்யரின் தங்கைபிள்ளை, பாலகிருஷ்ணன் அவனை நோக்கிவரச் சபேசன், ஆச்சர்யமும் சந்தோஷமும் கலந்த குரலில்,

"ஏண்டா? கிட்டு! உன்னைப் பார்ப்பது மிகவும் அபூர்வமாய்ப் போய்விட்டதே!" என்று சிரித்தான்.

பாலகிருஷ்ணனும், சபேசனும், ஆதியிலிருந்து ஒரே பள்ளியில் வாசித்த தோழர்களென்பதை இது வரையில் சொல்லச் சந்தர்ப்பம் இல்லை. பாலகிருஷ்ணன், அடிக்கடி சபேசன் வீட்டிற்கு வருவது வழக்கம். ஆனால், தன் மாமன் புதல்வியாகிய கமலம் கனகபுரிக்கு வந்ததுமுதற்கொண்டு, சபேசனை அவன் பார்க்கவே இல்லை. தன் காதலி சீச்சுவின் சூழ்ச்சியில் சிக்குண்டு பெரும் ஆபத்தில் மாட்டிக்கொண்டிருப்பதைக் கண்டதும், மிகவும் கவலைக்குள்ளானான். அவன் சாதாரணமாய்; தன் மனதிலிருக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் சபேசனிடம் சொல்வது வழக்கமாகையால், இதிலும் அவனுடைய யோசனையைக் கேட்க விரும்பி,

"சபேசா! உன்னுடன் ஒரு முக்கிய விஷயத்தைப் பற்றிப் பேச வந்திருக்கிறேன்." என்று சொல்லச் சபேசன்,

"அப்படியா? வா! வா! என் அறைக்குப் போவோம்." என்று கூறவே, இருவரும் சபேசனுடைய அறைக்குச் சென்றார்கள். பிறகு, பாலகிருஷ்ணன், சுருக்கமாய், கமலம் திடீரென்று படிப்பை நிறுத்திவிட்டு வந்ததையும், தனக்குச் சீச்சுவின் மேலுள்ள சந்தேகத்தையும் சொல்லி முடித்தான். அதைக்கேட்ட சபேசன் சிந்தனையுடன்,

"சரி இருக்கட்டும்; எப்படி இருந்தபோதிலும் நீ கவலைப்படுவதால் கொஞ்சமும் லாபமில்லை. இந்தச் சீச்சு என்ற பயல் பெரிய அயோக்கியன் என்பது எனக்கு வெகுநாளாய்த் தெரியும். ஆனால் அவன் தன் விஷயத்தைப் பேதைப் பெண்களிடம் காண்பிப்பானென்று நான் எண்ணவில்லை. நீ சொல்லுவதிலிருந்து, கமலம், அவனைக்



கண்டு மிகவும் பயப்படுகிறாளென்று தோன்றுகிறது; அதன் காரணத்தை நாம் முதலில் அறியவேண்டும்." என்றான்.

"நான் அவளைப் பலதரம் கெஞ்சியும், தன் மனதிலிருப்பதை வெளியிட மறுத்துவிட்டாள்."

"அதை நாம் தந்திரமாய் அறியவேண்டும். சரி இருக்கட்டும். வா! கொஞ்சம் வெளியில் போய்விட்டு வருவோம்." என்று சபேசன் அழைக்க, இருவரும் வெளியே போய்விட்டார்கள்.

அவர்கள் சென்றதும், சபேசன் தங்கை ராஜம், தன் தமையனுடைய அறைக்குள் நுழைந்து அங்கு ஒரு மேஜையின்மேல் காணப்பட்ட "சுந்தர கமலா அல்லது ஒரு கைம்பெண்ணின் காதல்." என்ற ஒரு நாவலை எடுத்து வாசிக்க ஆரம்பித்தாள். ஆனால் சற்று நேரத்திற்கெல்லாம், யாரோ அவ் வீட்டிற்குள் நுழைந்ததுபோலிருக்கவே, எழுந்து, வெளியே சென்று பார்த்தாள். முன்கட்டில், வக்கில் தாண்டவமய்யருடைய புதல்வன் ராஜேந்திரன் நின்றுகொண்டிருப்பதைக் கண்டதும், மரியாதையுடன், என்னவேண்டுமென்று விசாரிக்க, அவன்,

"சபேசன் இல்லையோ?" என்று வினவினான்.

ராஜம் 'இல்லை' என்று விடையளித்தபோதிலும், அவள் எதிர்பார்த்தவிதம் ராஜேந்திரன் உடனே வெளியே செல்லாமல், தயங்கியவண்ணம் நிற்கவே, அப்பெண்மணி அதன் காரணத்தை அறியாமல், வெட்கத்துடன், ஒரு தூணின் மறைவில் நின்றுகொண்டு அவனை உற்றுநோக்கியவாறிருந்தாள். ராஜேந்திரன், அவளுடைய கையிலிருந்த புஸ்தகத்தைக் கண்டதும்,

"அஃதென்ன புஸ்தகம்?" என்று வினவினான்.

ராஜம் :—"அது 'சுந்தர கமலா' என்ற ஒரு நாவல்."

ராஜேந்திரன் :—"ஓகோ! அப்படியா? அதை நானும் வாசித்திருக்கிறேன். சரி! நீ அதை முழுதும் வாசித்து விட்டாயோ?"

ராஜம் :—"அநேகமாய் வாசித்துவிட்டேன்; இன்னும் எழு பக்கங்களே பாக்கி."

ராஜேந்திரன் :—"அதில் சொல்லப்பட்டிருக்கிறவைகள் எல்லாம், உனக்குச் சரியென்று தோன்றுகின்றனவா?"

ராஜம் :—"ஏன்? அதில் சரித்தப்பான விஷயம் ஒன்றும் கூறப்படவில்லையே?"

ராஜேந்திரன் :—"அப்படியா? ஆனால் அதில் சொல்லப்படும் கதாநாயகி சுந்தரி என்ற அக் கைம்பெண் மறுவிவாஹம் செய்துகொண்டது சரியென்று சொல்லுகிறாய்?"

ராஜம் :—"அவள் செய்ததில் தப்பென்ன? ஆனால் உலகில் எல்லாக் கைம்பெண்களும் அவளைப்போல் அவ்வளவு புத்திசாலிகளாகவும் அதிர்ஷ்டசாலிகளாகவும் இருக்கமாட்டார்கள்."

ராஜேந்திரன்:—"ஏன் 'அதிர்ஷ்டசாலி' என்று கூறுகிறாய்?"

ராஜம் :—(அதிகரிக்கும் லஜ்ஜையுடனும், தடுமாற்றத்துடனும்) "அவள், காதலித்து, பிறகு விவாஹம் செய்துகொண்ட சுந்தரம் என்ற வாலிபர் மகா உத்தம குணசிலர். அவர் தற்சமயம், நம் ஜாதியில் கைம்பெண்களின் பரிதாப நிலைமையை நன்குணர்ந்து பலவித கஷ்டங்களும் மனஸ்தாபங்களும் நேரிட்டபோதிலும், அவைகளை லக்ஷியம் செய்யாமல், தைர்யத்துடன் தம் காதலியை மணந்துகொண்டார்.—"

ராஜேந்திரன் :—(சிறிது ஆத்திரத்துடன்) "ஆனால், தற்சமயம் நம் ஜாதியிலிருக்கும் சிறுவயதுள்ள கைம்பெண்களுக்கு மறுவிவாஹம் ஆகாமலிருப்பதற்குக் காரணம், நம் ஜாதியிலுள்ள வாலிபர்களுக்கு, அவர்களை விவாஹம் செய்துகொள்ளத் தைர்யமில்லாததாலென்பது உன் அபிப்பிராயமோ?"

ராஜம் :—"ஆம்! நானிப்படிப் பேசுவதைப்பற்றித் தயவு செய்து மன்னிக்கவேண்டும். ஆனால், அதற்குக் காரணம் அவர்களுடைய அதைர்யம் ஒன்றேயென்று நான் சொல்லவில்லை. சாதாரணமாய் நம் ஜாதியில் எல்லோருக்கும், கைம்பெண்களிடத்தில் ஒருவித அலக்ஷியமும் வெறுப்புமுண்டென்பதை, நீங்கள் மறுக்கமுடியாது. இன்னும், குறைப்பட்ட எந்தப் பெண்ணும் மறுவிவாஹம் செய்துகொள்ள இஷ்டப்படமாட்டாள். ஆனால், மறுவிவாஹம்செய்துகொள்ள அவர்கள் இஷ்டப்பட்டபோதிலும், அவர்களை மணந்துகொள்ள, நம் ஜாதியில் புருஷர்களிருப்பார்கள் என்று நான் நம்பவில்லை."

ராஜேந்திரன் :—"அம்மா! நீ இவ்விதம் நம் ஜாதி வாலிபர்களின்மீது குறைகூறுவதைக் காண வருத்தப்படுகிறேன். ஏனென்றால், அவர்கள் கைம்பெண்களை விவாஹம் செய்துகொள்ளத் தயங்குவதற்குக் காரணம், அவர்களுக்குக் குறைப்பட்ட பெண்களிடத்திலுள்ள, வெறுப்பும் அலக்ஷியமும் என்று நான் எண்ணவில்லை. ஒருகால் அது அதைர்யமென்பது வாஸ்தவமாயிருக்கலாம். அவள் குறைப்பட்டவள் என்ற ஒன்றைத்தவிர ஒரு பெண் மற்ற எல்லாவிஷயங்களிலும் ஒழுங்காய் இருக்கும்பக்ஷத்தில், அவளை விவாஹம் செய்துகொள்ள ஒருவன் மறுப்பானாகில், அவனை ஈவு, இரக்கமற்ற ஒரு மிருகமென்றே சொல்லவேண்டும்."

ராஜம் :—"நீங்கள் பேசுவதிலிருந்து நீங்களும், இக் கதையில் சொல்லப்படும் சுந்தரத்தைப்போன்ற ஒரு உத்தம புருஷர் என்று வேண்டுமானால் சொல்லலாமே ஒழிய, நம் ஜாதி வாலிபர்களுக்கு, இவ் விஷயத்தில் ஊக்கம் சிறிதுமில்லை என்று நான் கண்டிப்பாய்ச் சொல்வேன்."

இவ்விதம் பேசிக்கொண்டிருந்த ராஜம் திடுக்கிட்டாள். ஏனெனில், அச்சமயம், ராஜேந்திரன், அவளைப் பார்த்த ஒரு விதத்திலிருந்து, அவளுடைய மனதில் ஒரு சந்தேகம் தோன்றிவிட்டது. இன்னும், அதுவரையில், அவள்

பேச்சின் ஸ்வாரஸ்யத்தில் ஈடுபட்டு, பேசிக்கொண்டிருந்தாளே ஒழிய, சுபாவத்தில், ஒரு அந்நிய புருஷனுடன் தனிமையில் அப்படிப் பேச அவளுக்குத் தைரியமில்லை. ஆகையால், தன் தைரியத்தைக் கண்டு ஆச்சர்யப்பட்டவளாய், சற்றும் அங்குத் தாமதிக்காமல் அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டாள்.

நிற்க, ராஜேந்திரன் சிந்தாசாகரத்தில் மூழ்கிவிட்டான். "ஆஹா! இவளுடைய புத்தியும், இவளுடைய அழகைப் போலவே இருக்கிறது! அந்தோ! என் ஜாதியில் இப்பேர்ப்பட்ட பெண் திலகங்கள், எவ்வளவுபேர், அவர்கள் கைம்பெண்கள் என்ற ஒரு காரணத்தால், எல்லோராலும் அவமானப்படுத்தப்பட்டும், சுவானங்களுக்கும் கேடுகெட்ட நிலைமையில் மக்கி மடிகிறார்களோ? ஹே! தெய்வமே! நான் இவளைக் கண்டதிலிருந்து, இவள்மீது காதல்கொண்டு படும் அவஸ்தையை நீயே அறிவாய். வாஸ்தவமே. நான் என் அபேக்ஷையை என் தோழனிடம் தெரிவிக்கும்பக்ஷத்தில் அவன் யாதொரு ஆக்ஷேபணையும் சொல்லமாட்டான். இன்னும் என் தந்தையும் இதில் குறுக்கிட நியாயமில்லை. ஏனென்றால், அவர், இக் கைம்பெண் விவாஹக் குழப்பத்தில் மிகவும் ஊக்கமுள்ளவர். அப்படியானால் நான் தற்சமயம் தயங்குவதின் காரணமென்ன? ஹா! அதைர்யமோ?—" என்று சிந்தித்துக்கொண்டே இருந்தவனுடைய கண்களின் பார்வை எதிரில் மாட்டப்பட்டிருந்த ராஜத்தின், ஒரு புகைப்படத்தின்மேல் விழவே, தான் இன்னது செய்கிறோமென்பதை அறியாமல் அதை அணுகி, அதை ஆத்திரத்துடன் பலதரம் முத்தமிட்டுக்கொண்டான். ஆனால், உடனே தான் செய்துவிட்ட காரியத்தை உணர்ந்து, ஆச்சர்யப்பட்டவனாய், எங்கே அப்பெண்மணி அதைப் பார்த்துவிட்டாளோ எனப் பயந்து, ராஜம் சென்று மறைந்த அறையைக் கவனித்தான். அங்கு, அவள் அவனையே உற்றுநோக்கியவண்ணம் நின்றுகொண்டிருப்பதைக் காணவே, அவனுக்குண்டான குழப்பத்திற்களவில்லை. கடைசியில், ஒருவழியாய், தன் கலவரத்தை



அடக்கிக்கொண்டு, தடுமாற்றத்துடன் அவளை மறுபடியும் அணுகி, கெஞ்சிய குரலில்,

"அம்மா! தயவுசெய்து என்னை மன்னித்துவிடு." என்று வேண்டினான். ஆனால் ராஜத்தின் முகத்தில், அவன் பயந்ததுபோல், கோபத்தின் குறிகளாவது, வெறுப்பின் சின்னங்களாவது சிறிதும் காணப்படவில்லை. உள்ளதைச் சொல்லும்பக்ஷத்தில், அவளுடைய கண்கள், சந்தோஷத்துடன்,

"நான் வாசிக்கும் நாவலில் சொல்லப்பட்ட சுந்தரிக்கு, சுந்தரம் அகப்பட்டானென்றால், ராஜத்துக்கும் ஒரு ராஜேந்திரன் அகப்பட்டுவிட்டான்." என்று கூறுவதைப் போலிருந்தன.

---

## அத்தியாயம் 6

மறுநாட்காலை ஏழுமணி இருக்கும்.

சபேசன், காப்பி சாப்பிட்டுக்கொண்டே தன் தங்கை ராஜத்துடன் பேசிக்கொண்டிருந்தான். கடைசியில் தன் இடத்தை விட்டெழுந்து,

"அம்மா ராஜம்! மார்க்கெட்டுக்குப் போய்விட்டு வருகிறேன். அடாடா! மறந்தேவிட்டேன்! இன்று என் தோழன் பாலகிருஷ்ணனும் சாப்பிட வரப்போகிறான்." என்று அவ்வறையைவிட்டு வெளியே சென்றான். அதே சமயம், "ஸ்வாமி! ஸ்வாமி!" என்று அவசரத்துடன் கூவிக்கொண்டே யாரோ வெளிக்கதவைப் பலமாய்த் தட்டும் சப்தம் தன் செவிகளில் விழ,

"இது தாண்டவம்ஐயர் வீட்டு வேலைக்காரன் குமரவேலுடைய குரலல்லவோ?" என்று சொல்லிக்கொண்டே, பரபரப்புடன் சென்று கதவைத் திறந்தவன், அவ்வேலைக்காரனைக் கண்டதும் திடுக்கிட்டான். குமரவேல், சரீரம் முழுமையும் வியர்வை கொட்ட, பெருமூச்செறிந்துகொண்டே,

"ஸ்வாமி! சின்ன ஐயா உங்களை உடனே அழைத்து வரச் சொன்னார்கள்." என்றான்.

"என்னடா? என்ன சமாசாரம்?" என்று சபேசன் கவலையுடன் கேட்க, அவ்வேலைக்காரன்,

"எனக்கொன்றும் தெரியாது; நான் வழக்கம்போல் ஏழுமணிக்கு அவ்வீட்டிற்குச் சென்றபொழுது சின்ன ஐயாவும், அவருடைய தங்கையும் ஏதோ குசுகுசுவென்று பேசிக்கொண்டிருந்தார்கள். என்னைக் கண்டதும், உடனே உங்களை அழைத்துவரும்படி சொன்னார்கள்." என்று விடையளித்தான்.

இதைக்கேட்டதும் சபேசன் ஒன்றும் அறியமுடியாமல் கொஞ்சநேரம் திகைத்து நின்றான். பிறகு திரும்பி, கவலையுடன் நின்றுகொண்டிருந்த ராஜத்தைப் பார்த்து,

"அம்மா! நான் போய்விட்டு வருகிறேன். அதற்குள் என் தோழன் பாலகிருஷ்ணன் வந்தால், அவனைத் தாண்டவம்ஐயருடைய வீட்டிற்கு வரச்சொல்." என்று சொல்லிவிட்டுத் துரிதமாய் வெளியே நடந்தான்.

கடைசியில், அவன் தாண்டவம்ஐயருடைய வீட்டை அடைந்தபொழுது, அதன் முதல் ஹாலில் ராஜேந்திரனும், ஜானகியும், அவனை ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணம் நின்றுகொண்டிருந்தார்கள். ஜானகி, அவனைக் கண்டதும்,

"அண்ணா! அதோ அவர் வந்துவிட்டார்." என்று சொல்வதற்குள், சபேசன், தன் நண்பனை அணுகி, அவசரத்துடன்,

"ராஜேந்திரா! என்னவிஷயம்?" என்று வினவினான்.

ராஜேந்திரன், பிரமையுடன், "எனக்கு ஒன்றும் தெரியவில்லை. சபேசா! என் தந்தை போனவிடம் தெரியவில்லை" என்றான்.

சபேசன், ஆச்சரியப்பட்டவனாய், பெருமூச்சுவிட்டுக்கொண்டே,



"என்ன? போனவிடம் தெரியவில்லையா? ஏண்டா! அவரென்ன பச்சைக்குழந்தையா? அட பைத்தியமே! ஆனால் இதற்குத்தானோ இவ்வளவு தடபுடல் செய்துவிட்டாய்; அசடே! எங்காகிலும் கார்யமாய்ப் போயிருப்பார்." என்று கூறவே, ராஜேந்திரன் விசனத்துடன்,

"சபேசா! சற்று என்னுடன் வந்து நீ அவருடைய அறையைப் பார்ப்பாயாகில் இப்படிப் பேசமாட்டாய். வா! போவோம்." என்று சொல்லிக்கொண்டே, மாடியிலிருந்த தாண்டவம்ஐயருடைய அறையைநோக்கி நடந்தான். சபேசனும் ஜானகியும் அவனைப் பின்பற்றிச் சென்றார்கள். இதற்குள் அங்குவந்து கூடிய பல வேலைக்காரர்கள் கலவரத்துடன் ஒருவரையொருவர் நோக்கியவண்ணம் நின்றனர்.

நிற்க, மாடிக்குச்சென்ற சபேசன், தாண்டவம்ஐயருடைய அறையைக் கவனித்தான். ராஜேந்திரன் சபேசனுடைய தோளைத்தொட்டு,

"சபேசா! அதோ அவருடைய படுக்கையைப் பார். அது நேற்று இரவு போடப்பட்டபடியே இருக்கிறது! அதில் அவர் படுத்துக்கொண்டதாகவே தோன்றவில்லை!" என்றான்.

வாஸ்தவமே! அப்படுக்கையைக் கண்டதும் சபேசன் திடுக்கிட்டான். அவனுடைய மனதிலும், ஒருவித பீதியும் கவலையும் உண்டாயின. ஆனால், அதை ஜானகியின் முன்னிலையில், வெளிக்காட்டுவது பிசகென நினைத்து, மிகவும் சாந்தமாய்,

"இருந்தாலும் ஒன்றும் பாதகமில்லை." என்று சொல்லிக்கொண்டே ஜானகியைப் பார்த்து,

"அம்மா! நேற்று இரவு நீ அவரைப் பார்த்தாயோ?" என்று வினவ, அப்பெண்மணி,

"பார்த்தேன்! நானே அவருக்குச் சாதம் போட்டேன்." என்றாள்.

"ஏன்? சமயற்காரன் கிருஷ்ணன் எங்கே போய்விட்டான்?" என்று சபேசன் கேட்க, ஜானகி,

"அவன், தலைவலி பொறுக்கமுடியவில்லையென்று போய்ப் படுத்துக்கொண்டுவிட்டான்." என்று விடை கூறினாள்.

பிறகு, சபேசன், தன் நண்பனைப் பார்த்து,

"ஏண்டா! நீயும் அவரைப் பார்த்தாயோ, இல்லையோ?" என்று கேட்க, ராஜேந்திரன்,

"இல்லை. நான் ஒன்பதுமணி வரையில், அவருக்காகக் காத்திருந்தும், அவர் நகரமண்டபத்திலிருந்து வராததால் சாப்பிட்டுவிட்டுப் போய்ப் படுத்துவிட்டேன்." என்றான். சபேசன் மறுபடியும், ஜானகியை நோக்கி,

"அவர் திரும்பி வந்தபொழுது எவ்வளவு மணியிருக்கும்?" என்று வினவ, அப்பெண்மணி,

"பத்து மணிக்கு மேலிருக்கும். சமையற்காரக் கிருஷ்ணன் தூங்கிவிட்டதால், நான் அவரிடம் சென்று இலை போடட்டுமா என்று கேட்க, போடு என்பதற்கடையாளமாகத் தம் தலையையாட்டினார்.—" என்று மேலே பேசுமுன், சபேசன்,

"சரி, சாப்பிட்டார்; ஆனால் உன்னிடம் ஒன்றும் பேசவேயில்லையோ?" என்று வினவ, அவள்,

"இல்லை, அவரைப் பார்த்ததும், ஏதோ சிந்தனையிலாழ்ந்தவர்போல் காணப்பட்டார். சரியாய்ச் சாப்பிடவுமில்லை. பிறகு கைகால்களைச் சுத்தம் செய்துகொண்டு முன்கட்டுக்குப் போய்விட்டார்." என்றாள்.

"சரி உன்னைத் தவிர, வேறுயாரும் அவரைப் பார்க்கவில்லையோ?"

"ஏன் வண்டிக்காரன் பொன்னம்பலம் பார்த்திருக்கிறான். அவனே நகரமண்டபத்திலிருந்து வண்டியோட்டிக்கொண்டு வந்தான்."



"அப்படியா? அவனிப்பொழுது எங்கே?"

"இதோ இருக்கிறான். அடே! பொன்னம்பலம்!" என்று ஜானகி கூப்பிடவே, வண்டிக்காரப் பொன்னம்பலம் அங்குவந்து மரியாதையுடன் நின்றான். சபேசன், அவனை நோக்கி,

"ஏண்டா! நேற்று இரவு, 'யஜமான் நகரமண்டபத்தை விட்டு வந்தபொழுது என்ன மணியிருக்கும்?" என்றுகேட்க,

"சுமார் $9\frac{1}{2}$ மணியிருக்கலாம்." என்று பொன்னம்பலம் விடையளித்தான்.

"உன்னிடம், இரவில் மறுபடியும் எங்காவது வெளியில் போகவேண்டுமென்று சொன்னாரோ?"

"இல்லை. அவர் என்னுடன் பேசவேயில்லை." என்று பொன்னம்பலம் கூறவே, அவனைப் போகச்சொல்லிவிட்டுச் சபேசன், கொஞ்சநேரம் மௌனமாயிருந்தான். பிறகு, ராஜேந்திரனைப் பார்த்து,

"ஆமாம்! மறந்துவிட்டேன்; காலமே வாசற்கதவைத் திறந்தது யார்? அது அப்பொழுது, திறந்திருந்ததா, அல்லது வழக்கம்போல் தாளிடப்பட்டிருந்ததா?" என்று கேட்க, ராஜேந்திரன்,

"அடாடா! நானும் மறந்துவிட்டேனே! ஏனம்மா ஜானகி! உனக்குத் தெரியுமோ?" என்று தன் தங்கையைக் கேட்க, அப்பெண்மணி,

"எனக்குத் தெரியாது! ஆனால், தினந்தோறும், வேலைக்காரி செல்லம், காலை $5\frac{1}{2}$ மணிக்கே வரும் வழக்கமாகையால், அவளுக்குச் சமையற்காரக் கிருஷ்ணன் கதவு திறப்பதுண்டு. அவனைக் கேட்டால் தெரியும்." என்றாள்.

உடனே, கிருஷ்ணன் அழைக்கப்பட்டான். அவன் வந்ததும், சபேசன்,

"ஏண்டா கிருஷ்ணா? இன்று காலமே வாசற்கதவை நீதான் திறந்தாயோ?" என்று வினவினான்.

கிருஷ்ணன்:— " ஆம் ! "

சபேசன்:— " அது திறந்திருந்ததா? அல்லது தாளிடப் பட்டிருந்ததா ? "

கிருஷ்ணன்:— " தாளிடப்பட்டுத்தானிருந்தது . "

சபேசன்:— " என்ன ஆச்சர்யம் ! பின் அவர் எப்படி வெளியில் போயிருப்பார் ? அடாடா ! மறந்துவிட்டேனே ! கொல்லைக் கூடிகாரு கேட்டை யார் பூட்டுவது வழக்கம் ? "

கிருஷ்ணன்:— " நானே ."

சபேசன்:— நேற்று இரவு எப்பொழுது பூட்டினாய் ? "

கிருஷ்ணன்:— "சுமார் 10 மணிக்கு, பொன்னம்பலம், வண்டியைக் காடிகானாவில் கொண்டுவந்துவிட்டதும், பூட்டினேன்."

சபேசன்:—"ஏண்டா! நீ ஒன்பது மணிக்குப் படுத்துக்கொண்டுவிட்டதாக, ஜானகி சொன்னாளே ?

கிருஷ்ணன்:— "வாஸ்தவம்! ஆனால் 10 மணி சுமாருக்கு விழித்துக்கொண்டேன். அப்பொழுது ஞாபகம்வர, கொல்லைப்பக்கம் சென்று, வண்டி வந்துவிட்டதையறிந்து, பூட்டினேன். பிறகு மறுபடியும் வந்து படுத்துக்கொண்டேன்."

சபேசன்:— " சரி ! காலமே எப்பொழுது திறந்தாய் ? "

கிருஷ்ணன்:— " இன்னும் திறக்கவில்லை."

சபேசன்:—" ஆனால், இப்பொழுது அது பூட்டப்பட்டுத்தானிருக்கிறதோ ? "

கிருஷ்ணன்:—" பூட்டப்பட்டுத்தானிருக்கும்."

பிறகு, சபேசன், ராஜேந்திரன்பக்கம் திரும்பி " வா ! போய்ப்பார்ப்போம் ." என்றுசொல்ல, இருவரும் கொல்லைப்பக்கம் போகுமுன் சபேசன், மறுபடியும் கிருஷ்ணனைப் பார்த்து,



" ஏண்டா, அப்பூட்டின் சாவியெங்கே ? " என்று வினவ, கிருஷ்ணன், அது காடிகானாவிலேயே, ஒரு ஆணியில் மாட்டப்பட்டிருக்குமென்று விடையளித்தான். உடனே தோழர்களிருவரும், மேலே, நடந்தார்கள். அவர்கள் பிறகு காடிகானாவிற்குச் சென்று, அச்சாவியை வழக்கமாய் மாட்டப்படுமிடத்தில் பார்த்தபொழுது, அது அங்குக் காணப்படவில்லை. அதைக்கண்ட சபேசன், பரபரப்புடன் கேட்டை நோக்கியோடினான். அது திறந்திருந்தது. பூட்டும் சாவியும், சமீபத்தில், தரையில் கிடந்தன. வர வர, சபேசனுடைய சந்தேகம், அதிகரித்துக்கொண்டே வந்தது. அவன், ராஜேந்திரனைப் பார்த்து,

" இது மிகவும் ஆச்சர்யப்படத்தக்க விஷயமே. உன் தந்தை இரவில் இரஹஸ்யமாய் வெளியே போயிருக்கிறாரென்பதில் சந்தேகமில்லை. " என்றான்.

" வாஸ்தவம் ! வாசற்கதவைத் திறந்துகொண்டு போகும்பக்ஷத்தில், வழியில் படுத்துக்கொண்டிருக்கும், கிருஷ்ணன் பார்த்துவிடுவானென்று, சமையற்கட்டின் சமீபத்திலிருக்கும், மாடிப்படிகளின் வழியாய்க் கீழே வந்து, இப்பக்கமாய், வெளியே சென்றிருக்கவேண்டும். ஆனால், அவர் இப்படி ரஹஸ்யமாய் எங்குப் போகக்கூடும் ? இன்னும், அவர் இந்தக் கதவைத் திறந்தபடியே வைத்துவிட்டுப் போயிருப்பதிலிருந்து, சீக்கிரம் திரும்புமெண்ணத்துடன் போயிருக்கிறாரென்று தோன்றுகிறது. எனவே, இதுவரையில் அவரைக் காணாததால், அவருக்கு ஏதோ அபாயம் நேரிட்டிருக்கவேண்டுமென்பதில் சந்தேகமில்லை ." என்று ராஜேந்திரன், கவலையுடன் கூறவே, சபேசன்,

" வாஸ்தவம் ! இதை நாம் உடனே போலீஸாருக்குத் தெரிவிப்பதே நலம். ஆனால், நாம் அதிகக் குழப்பம் செய்வோமாகில், உன் தங்கை கலவரப்படுவாள். இன்னும்......" என்று பேசிக்கொண்டேயிருக்கையில், குமாரவேல் அங்கு ஓடிவந்து, தடுமாற்றத்துடன், ராஜேந்திரனைப் பார்த்து,

"உங்களை வாசலில் ஒரு போலீஸ்காரன் கூப்பிடுகிறான்." என்று சொல்லவே, தோழர்களிருவரும் திடுக்கிட்டு ஒரே வாக்காய்,

"என்ன? என்ன? போலீஸ்காரனா?" என்று கூவிக்கொண்டே அவ்விடத்தைவிட்டு ஓடினார்கள்.

நிற்க, அவ்வீட்டின் முதல் ஹாலில் நின்றுகொண்டிருந்த ஒரு போலீஸ்காரன் பயந்த பார்வைகளுடனும், ஆவலுடனும், தன்னைச் சூழ்ந்துகொண்டிருந்த பல வேலைக்காரர்களிடம் பேசிக்கொண்டிருந்தான். அவன்,

"இவர்களுக்கு மடத்துத்தெருவிலும் ஒருவீடு உண்டோ?" என்று விசாரிக்க, மற்ற எல்லோரும் உண்டென்று சொன்னார்கள்.

அதற்குள், அங்குவந்துசேர்ந்த சபேசனும், ராஜேந்திரனும் அப் போலீஸ்காரனை நோக்கி, சொல்லொணாக் கவலையுடன்,

"ஐயா! என்ன விசேஷம்? உள்ளதை உடனே சொல்லும்" என்று கேட்டுக்கொண்டிருக்கும்பொழுது, ஜானகி அங்கு ஓடிவந்து தன் தமயனுடைய கரங்களைப் பற்றிக்கொண்டு, போலீஸ்காரனுடைய முகத்தையுற்று நோக்கியவண்ணம் நின்றாள்.

அவளுடைய கைகால்கள் நடுங்குவதையும், அவளுடைய முகத்தின் பரிதாபத் தோற்றத்தையும் கண்ட, அப் போலீஸ்காரன், தான் கொண்டுவந்திருக்கும் செய்தியை அவள் முன்னிலையில் சொல்லத் தயங்கவே, ராஜேந்திரன், அவசரத்துடன்,

"ஐயா! இப் பெண் இங்கிருப்பதால் பாதகமில்லை. உம்முடைய முகத்தைப் பார்க்கும்பொழுதே, நீர் ஏதோ பயங்கரமான செய்தி கொண்டுவந்திருக்கிறீர் என்பதில் சந்தேகமில்லை. எப்படியும், அது இவளுக்குத் தெரியாமற் போகாதாகையால், தயவுசெய்து விஷயத்தை உடனே சொல்லும்." என்று கெஞ்சினான். அப் போலீஸ்காரன்,



"ஸ்வாமி! மடத்துத்தெருவில் உங்களுக்குள்ள வீட்டில், உங்களுடைய தந்தை கொலைசெய்யப்பட்டுக் கிடக்கிறார்." என்றான்.

ஜானகி, இதைக் கேட்டதும், "ஐயோ!" என்று ஒருதரம் வீறிட்டலறினாள். மறுவினாடி மூர்ச்சையுற்றுத் தரையில் விழுந்தாள். ராஜேந்திரன் தலைசுற்ற, பக்கத்திலிருந்த சபேசன்மீது சாய்ந்துவிட்டான்.

அச்சமயம், அவ்வீட்டிலிருந்த குழப்பத்தை இங்கு நாம் விவரிக்கமுடியுமா? எல்லோரும் பேசவும் சக்தியற்று ஸ்தம்பங்கள்போல் நின்றார்கள். ஆனால் சபேசன் ஒருவாறு தன் மனதைச் சமாதானப்படுத்திக்கொண்டு, திடீரென்று சித்தப்பிரமை கொண்டவன்போல் காணப்பட்ட ராஜேந்திரனுடைய முகத்தை அன்புடன் தாங்கியவண்ணம், பரபரப்புடன்,

"ராஜேந்திரா! இச்சமயம் நீயும் தைரியத்தைக் கைவிடுவது மிகவும் பிசகு. நடந்திருக்கும் காரியமோ இலேசானதன்று. மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு மேலே ஆகவேண்டியதைக் கவனிப்பதே புருஷர்களுக்கழகு. இவ்விதம், பிரமித்து நிற்பதில் சிறிதும் பயனில்லை." என்று கூறிவிட்டுக் கவலையுடன் ஓடி, மூர்ச்சித்துக்கிடந்த ஜானகிக்கு மறுபடியும் பிரக்கினை வருவதற்குவேண்டிய சிகிச்சைகளைச் செய்துகொண்டே, வேலைக்காரர்களில் ஒருவனை உடனே சென்று, தன் தங்கை ராஜத்தை உடனே அழைத்துவரும்படி கட்டளையிட்டான். கால்மணி நேரத்திற்கெல்லாம், அவள் வந்துசேர அவளை ஜானகியைப் பார்த்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டு, ராஜேந்திரனையழைத்துக்கொண்டு வெளியே சென்றான். ஆனால், தெருவையடைந்ததும்,

"ராஜேந்திரா! மறந்துவிட்டோம். வேலையாட்களில் ஒருவனையனுப்பி உன் தமயன் மூர்த்தியை அழைத்துவர ஏற்பாடு செய்யவேண்டும்." என்று மறுபடியும் வீட்டிற்குள் நுழைந்து, குமரவேலை டபீர்த்தெருவிலிருக்கும் தாண்டவம்ஐயருடைய மூத்தகுமாரனாகிய மூர்த்தியின்

வீட்டிற்கு அனுப்பினான். பிறகு, இருவரும் மடத்துத் தெருவைநோக்கித் துரிதமாய் நடந்தார்கள்.

கடைசியில், அவர்கள் மடத்துத்தெருவிலுள்ள அவ்வீட்டின் அருகிலே சென்றபொழுது, அங்கு ஏற்கனவே ஜனங்கள் ஏகமாய்க் கூடியிருப்பதைக் கண்டார்கள். ஆனால் அவர்களில் எவரையும் உள்ளே போகமுடியாமல் தடுத்துக் கொண்டிருந்த இரு போலீஸ்காரர்கள், சபேசனையும் ராஜேந்திரனையும், இன்னும் அவர்களுடன் காணப்பட்ட போலீஸ்காரனையுங் கண்டதும், உள்ளேசெல்ல இடங் கொடுத்தார்கள்.

அவ்வீட்டு முதல் அறையில் போலீஸ் இன்ஸ்பெக்டர் முனிசாமிநாயுடு, அவர்களை எதிர்பார்த்தவண்ணம் நின்றுகொண்டிருந்தார். ராஜேந்திரன் சிறு குழந்தையைப்போல் விம்மிவிம்மியழுதுகொண்டே அவரைப் பார்த்து,

"ஐயா! நான் உடனேசென்று என் தந்தையின் சவத்தைப் பார்ப்பதில் உங்களுக்கு யாதொரு ஆக்ஷேபணையுமிருக்காதென்று நம்புகிறேன்." என்று சொல்ல, முனிசாமிநாயுடு, அவனுடைய வருத்தத்தையும் மனோநிலைமையையும் நன்குணர்ந்து,

"தாராளமாய்ப் பார்க்கலாம்" என்று அனுமதி கொடுத்தார். உடனே, ராஜேந்திரன், சவமிருந்த அறையை நோக்கியோடினான். அங்குக் காணப்பட்ட கோரக்காட்சியை இங்கு எடுத்து எழுதுவது உசிதமல்ல.

வர வர, ராஜேந்திரன் தன் துக்கத்தையடக்கமுடியாமல் அலற ஆரம்பிக்கவே, சபேசன், அவனுக்குப் பல விதத்தில் சமாதானமும் தைர்யமும்சொல்லி அவ்விடத்தை விட்டு வெளியே அழைத்துவந்தான். அச்சமயம் டாக்டர் ராமண்ணாரெட்டி உள்ளேவர, போலீஸ் இன்ஸ்பெக்டர்,

"டாக்டர்வாள்! வாருங்கள்; வாருங்கள். உங்களுக்காகத்தான் காத்துக்கொண்டிருக்கிறேன்." என்று கூறிக் கொண்டே, அவரையழைத்துக்கொண்டு சவம் கிடந்த அறைக்குட் சென்றார்.



ராமண்ணாரெட்டி, தம்கார்யங்களெல்லாம் முடிந்ததும் கொலைசெய்யப்பட்டவர், முதல்னாளிரவில் 12மணிக்கும் 1மணிக்குமிடையில் கொல்லப்பட்டிருக்கவேண்டுமென்றும் அது ஒருபொழுதும் தற்கொலையாயிருக்கமுடியாதென்றும், இன்னும் சாதாரணமாய் எல்லோரும் உபயோகிக்கக்கூடிய ஒரு க்ஷவரக்கத்தியினால் அவருடைய கழுத்து நன்றாய் அறுக்கப்பட்டிருக்கிறதென்றும், தம் அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

பிறகு நடந்த விசாரணையை விவரித்துச்சொல்லவேண்டியது அவசியமில்லை. தாண்டவம்ஐயர் வீட்டு வேலைக்காரர்கள் எல்லோரும் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். சபேசனும் ராஜேந்திரனும் சிலகேள்விகள் கேட்கப்பட்டார்கள். கடைசியில், போலீஸ் இன்ஸ்பெக்டர் மேலே என்ன செய்வதென்று யோசித்துக்கொண்டிருக்கையில் போலீஸ்காரன் ஒருவன் அவரிடம் வந்து ஏதோசொல்ல, அவர், கண்டிப்பாய்,

"யாராயிருந்தாலும் உள்ளே விடாதே!" என்று கட்டளையிடவே, சபேசன், மரியாதையுடன்,

"இன்ஸ்பெக்டர்வாள்! கொலைசெய்யப்பட்டவரின் மூத்தகுமாரராகிய மூர்த்தியென்பவரை நாங்கள் எதிர்பார்க்கிறோம். அவர் வரும்பக்ஷத்தில் உள்ளேவிட அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்." என்றான்.

இன்ஸ்பெக்டர் "அப்படியா?" என்று திரும்பிப் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த போலீஸ் சேவகனைப் பார்த்து, உள்ளே வரப்பிரியப்படுபவரின் பெயரென்னவென்று கேட்க; அது சபேசன் எதிர்பார்க்கும் மூர்த்தியேயெனக் கண்டு, அவனை உடனே உள்ளே அழைத்துவரும்படி உத்தரவிட்டார். சற்றுநேரத்திற்கெல்லாம், மூர்த்தி உள்ளே நுழைந்தான். அவனும், உடனே சவத்தைப் பார்க்க அனுமதிகேட்க, போலீஸ் இன்ஸ்பெக்டர், மரியாதையுடன் சம்மதித்ததுமன்றி, அவனுடன் தாமும் அவ்வறைக்குச் சென்றார். மூர்த்தி சுமார் ஐந்து நிமிஷநேரம் வரையில்

சவத்தின் முகத்தை உற்றுநோக்கியவண்ணமிருந்தான்.
அதனிடையில் பலதரம் பெருமூச்செறிந்தான். பிறகு,
தன் நேத்திரங்களிலிருந்து பிரவாகமாய்க் கொட்டிக்கொ
ண்டிருந்த கண்ணீரைத் தன் அங்கவஸ்திரத்தினால் துடை
த்தவண்ணம், திரும்பி, போலீஸ் இன்ஸ்பெக்டரைப்
பார்த்து,

"ஐயா! இது கொலையா? அல்லது தற்கொலையா?"
என்று வினவ, நாயுடு,

"இது கண்டிப்பாய்க் கொலையே!" என்று விடை
யளித்தார்.

மூர்த்தி:—"சரி! இதைப்பற்றி இது வரையில் தங்களுக்
குத் தெரிந்ததைச் சொல்லும்படி கேட்டுக்கொள்ளு
கிறேன்!"

இன்ஸ்:—"அஃதொன்றும் அதிகமில்லை. உங்களுடைய
தந்தை இவ்வீட்டுத்திண்ணையில் ஒருவனுக்குக் கச்ச
ட்டிக்கடைவைக்க அநுமதி கொடுத்திருக்கிறாராம்.
இவ்வீடு சென்ற சில மாதங்களாய்க் குடியின்றிப்
பூட்டப்பட்டிருப்பதை நான் உங்களுக்குச் சொல்ல
வேண்டியதில்லை. அக்கடைக்காரன் வழக்கம்போல்
இன்று காலை 7 மணி சுமாருக்கு, இங்கு வந்தபொ
ழுது, வாசற்கதவு திறந்திருப்பதைக்கண்டு, ஒருகால்
உங்களில் யாராகிலும் வந்திருக்கலாமென்று நினைத்து
உள்ளே நுழைய, உங்கள் தந்தை கொலைசெய்யப்ப
ட்டுக்கிடப்பதைக் கண்டான். உடனே அவன், தான்
கண்டதை, இத்தெருவிலிருக்கும் போலீஸ்காரனிடம்
சொல்லிக்கொண்டிருக்கையில், தற்செயலாய், அப்ப
க்கம் வந்த நான், இதையறிந்து, உடனே இங்கு
வந்தேன்."

மூர்த்தி:—"சரி! கொலைசெய்தவனைக் கண்டுபிடிக்க சாதக
மாயிருக்கக்கூடிய வஸ்து ஏதேனுமகப்பட்டதோ?"

இன்ஸ்:—"இல்லை; இது மிகவும் விசித்திரமான கேஸாகக்
காணப்படுகிறது. சவம்கிடந்த அறையில், சவத்தைத்



தவிர வேறு எவ்விதமான வஸ்துவும் தென்படவில்லை.
நான் இவ்வீடு முழுமையும் சோதனை செய்துவிட்
டேன்."

மூர்த்தி:—"ஆனால் என் தந்தையின் பிரேதம் கண்டுபிடிக்
கப்பட்டபொழுது அவர் இதே உடையில்தான் காண
ப்பட்டாரோ?"

இன்ஸ்:—"ஆம்! இடுப்பில் ஒரு சேலம் வேஷ்டியும்,
தோளில் ஒரு மலையாளத்து முண்டும், சமீபத்தில்
ஒரு பட்டுக் கைக்குட்டையும் தென்பட்டன. ஒரு
கால் அக்கைக்குட்டை கொலைசெய்தவனுடையதாயுமி
ருக்கலாம்."

மூர்த்தி:—"அப்படியா? அக்கைக்குட்டையை நான் பார்க்
கலாமோ?"

இன்ஸ்பெக்டர் "தாராளமாய்ப் பார்க்கலாம். இதோ
பாரும்." என்று சொல்லிக்கொண்டே, தம் சட்டைப்பையி
லிருந்து, ஒரு கடிதத்தில், மடித்துவைக்கப்பட்டிருந்த ஒரு
கைக்குட்டையைக் காண்பித்தார். அதிலிருந்து கம்மென்று
ஒருவித வாஸனை வெளிக்கிளம்பி வீசியது. இன்னும் அக்
கைக்குட்டை விலையுயர்ந்ததாகவும், மிகவும் புதிதாகவும்
காணப்பட்டது. அதைக்கண்ட நம் சபேசன் கொஞ்சநே
ரம் அதை உற்று நோக்கியவண்ணமிருந்தான். மூர்த்தி
அதைப் பார்த்தான பிறகு, இன்ஸ்பெக்டர் மறுபடியும்
அதை மடித்துத் தம் சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்
டார். அச்சமயம், மூர்த்தி,

"இன்ஸ்பெக்டர்வாள்! இவ்விதம் அநியாயமாய்க்
கொலைசெய்யப்பட என் தந்தைக்கு விரோதிகள் இருக்கக்
கூடுமென்பதை என்னால் நம்பமுடியவில்லை. அது யாராயி
ருந்தபோதிலும், நீங்கள், உங்களால் முடிந்தவரையில் சிர
மப்பட்டுக் கண்டுபிடித்து, இதற்குள்ள தண்டனைக்குள்ளா
க்குவீர்களென்று நம்புகிறேன். இதனால் எவ்வளவு பண
ச்செலவு ஆனபோதிலும் பாதகமில்லை. இன்னும் அநேக

சியமாய்க் காலதாமதம் செய்யாமல், சவத்தை எங்கள் ஜாதி வழக்கப்படி அடக்கம்செய்ய அநுமதி கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அடாடா! மறந்தேவிட்டேன். என் முக்கிய சிநேகிதர் ஒருவருக்கு இவ்விஷயத்தை உடனே தெரிவிக்கவேண்டும்!'' என்று சொல்லிக்கொண்டே, தன் சட்டைப்பையிலிருந்து, ஒரு கடிதத்தையெடுத்து, அவசரத்துடன் தான் எழுதுவதைப் பிறர் பார்க்கமுடியாத வகையில், ஒரு கடிதம் எழுதினான். பிறகு அதை மடித்துக்கொண்டே, பக்கத்தில் நின்றுகொண்டிருந்த தன் தம்பி ராஜேந்திரனைப் பார்த்து,

"ராஜூ! நம் வீட்டு வேலைக்காரன் குமாரவேலிருந்தால், சற்று அவனைக் கூப்பிடு.'' என்று சொல்ல, ராஜேந்திரன் அவ்விடத்தைவிட்டுச் சென்றான். சற்று நேரத்திற்கெல்லாம், அவ்வேலைக்காரன் வந்ததும், மூர்த்தி,

"டேய்! இதைப் பண்ணையார் அக்கிரஹாரம் வக்கில் M. A. சுப்பிரமணிய அய்யரிடம் உடனே கொடுத்துவிட்டுவா.'' என்று கடிதத்தைக் கொடுக்க, குமாரவேல் வெளியே சென்றான். ஆனால் அவன், பத்தடி தூரம் சென்றதும்,

"அடே! இரு! இரு!'' என்று ஏதோ சொல்ல மறந்துவிட்டவன்போல், அவனை நோக்கிச் சென்று, அவனிடம் தாழ்ந்த குரலில் ஏதோ சொன்னான். பிறகு, மறுபடியும் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் வந்தான்.

நிற்க, சபேசன், மூர்த்தி அங்குவந்ததுமுதற்கொண்டு, அவனையே கவனித்தவண்ணமிருந்தான். அவன் கடிதம் எழுதவாரம்பித்ததும், "சரி! இதில் ஏதோ விசேஷமிருக்கிறது; எப்படியாகிலும் அக்கடிதத்தைப் பார்க்கவேண்டும்; ஆனால், தற்சமயம் நான் குமாரவேலைப் பின்தொடர்ந்துசெல்வது முடியாத காரியம். போலீஸ் இன்ஸ்பெக்டர், கண்டிப்பாய் மூர்த்தியையும் விசாரிப்பார். அவன் என்ன சொல்கிறானென்பதை அவச்யம் கேட்கவேண்டும். இருக்கட்டும்.'' என்று, ஏதோ தன்மனதில் தீர்மானித்தவன்போல், பரபரப்புடன் வெளியே சென்றான். அங்கு



இதற்குள் ஜனக்கூட்டம் அதிகரித்துவிட்டது. அதில் அவன் தோழனாகிய பாலகிருஷ்ணனும் காணப்பட்டான். அவனைக்கண்டதும் சபேசனுடைய முகம் மலர்ந்தது. "பேஷ்! இப்பொழுது இவன் அகப்பட்டது என் அதிர்ஷ்டமே.'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டே, மிகவும் சிரமத்துடன் அவனையணுகி, தனிமையில் அழைத்துச் சென்று,

"கிட்டு! இப்பொழுது நீ ஒரு காரியம் செய்யவேண்டும்.'' என்றான். அவன் பேசிக்கொண்டிருந்தபோதிலும், அவனுடைய கண்களின் பார்வை, கொஞ்சதூரத்தில் சென்றுகொண்டிருந்த குமாரவேலையே பின்பற்றிச்சென்றது. தன் தோழனுடைய கவனத்தை அப்பக்கம் செலுத்தி,

"கிட்டு! அதோ ஒருவன் போகிறானல்லவா? அவனை எப்படியாவது அரைமணிச் சாவகாசம், உன் வசம் வைத்துக்கொள். முடியுமானால் சேஷய்யர் காபிக்கிளப்பில் இரு.'' என்று சொல்லிவிட்டுப் பாலகிருஷ்ணன் மேலே பேசுமுன் ஓடி, அவ்வீட்டிற்குள் மறைந்தான். நல்லவேளையாய்ப் போலீஸ் இன்ஸ்பெக்டர், இன்னும் மூர்த்தியை விசாரிக்க ஆரம்பிக்கவில்லை. அச்சமயம், அவர்கள், சவத்தை தாண்டவம்ஐயருடைய வீட்டிற்குக் கொண்டுபோகவேண்டிய ஏற்பாட்டைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அது முடிந்ததும், நாயுடு, மூர்த்தியைப் பார்த்து,

"ஐயா! சற்று உங்களுடன் நான் பேசவேண்டும்.'' என்றார்.

மூர்த்தி:—"அப்படியா? நான் தயார்.''

நாயுடு:—"இப்பேர்ப்பட்ட கொலைக்கேஸ்களில், கொலைசெய்யப்பட்டவருடன் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரையும் நாங்கள் விசாரிக்கவேண்டியது அவசியம்——''

மூர்த்தி:—"நியாயமான விஷயம். ஆனால் வீண் காலதாமதம் செய்வதில் எனக்கிஷ்டமில்லை. நீங்கள் கேட்கக்கூடிய கேள்விகளுக்கு விடையளிக்க எனக்கு ஒரு

ஆக்ஷேபணையுமில்லை. இன்னும், இதுவரையில் நீங்கள் எங்கள் வீட்டு வேலைக்காரர்களையும், என் சகோதரனையும் விசாரித்ததிலிருந்து, எனக்கும், என் தந்தைக்கும் மனஸ்தாபம் உண்டென்பதைக் கேள்விப்பட்டிருப்பீர். ஆனால் அம்மனஸ்தாபம் சாதாரணமாய் எல்லாக்குடும்பங்களிலுமிருக்கக்கூடிய மனஸ்தாபமேயொழிய வேறன்று."

நாயுடு:—"பேஷ்! நான் கேட்க இருந்த கேள்விக்கு, அதை நான் கேட்குமுன்னமேயே, நீங்கள் விடையளித்துவிட்டீர்கள்——"

மூர்த்தி:—"அதுமட்டுமன்று. இன்னும் நான் நேற்று இரவு முழுமையும் எவ்விதம் காலங்கழித்தேனென்பதையும், கொலை நடந்த அச்சமயம், நான் எங்கிருந்தேனென்பதையும் கேட்கப்போகிறீர்கள். இன்ஸ்பெக்டர்வாள்! இக்கேள்விகளுக்கு விடையளிக்குமுன் நான் சற்றுத் தயங்காமலிருக்கமுடியவில்லை. ஆனால் அதற்குக் காரணம், அவ்விடத்தைச் சொல்ல எனக்குச் சிறிது வெட்கமாயிருக்கிறது. இருந்தபோதிலும், நான் அதை மறைப்பது சந்தேகத்திற்கிடமாகையால் சொல்லிவிடுகிறேன்——" என்று தன் பேச்சை நிறுத்திவிட்டு, ஒருதரம் நாலாபக்கங்களையும் கவனித்தான். அச்சமயம், சபேசன், அவன் பேசியதைச் சற்றும் செவிகொடுத்துக் கேட்காதவன்போல், தன் முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொண்டிருக்க, மூர்த்தி, தாழ்ந்தகுரலில், "நான் நேற்று இரவு 8 மணியிலிருந்து இன்று காலை 7 மணி வரையில் நவநீதகிருஷ்ண ஸ்வாமி கோவில் சன்னதியிலிருக்கும் தாஸி ராஜலெக்ஷ்மியின் வீட்டிலிருந்தேன். சுமார் 8 மணிக்கு நான் வீட்டிற்குச் சென்றபொழுது, ஏற்கனவே என் பொருட்டுக் காத்துக்கொண்டிருந்த ஒரு வேலைக்காரனிடமிருந்து இவ்விஷயத்தையறியவே, உடனே இங்கு வந்தேன்."



நாயுடு:—"சரி! நீங்கள் கடைசியாக, உங்கள் தந்தையைப் பார்த்தது எப்பொழுது?"

மூர்த்தி:—"இரண்டு நாட்களுக்குமேலிருக்கும்."

நிற்க, மூர்த்தி பண்ணையார் அக்கிரஹாரம் M. A. சுப்பிரமணிய அய்யரிடம் கொடுக்கும்படி கடிதம் எழுதிக் கொடுத்தபோதிலும், குமாரவேல் அவ்வீட்டைவிட்டு வெளியேவந்து வீதியையடைந்ததும், பண்ணையார் அக்கிரஹாரம்போக, இடதுகைப்பக்கம் போகவேண்டியிருக்க, அப்படிச் செய்யாமல், வேறுவழியாக நடந்தான்.

சபேசனுடைய தோழன், பாலகிருஷ்ணன், சற்றும் தாமதிக்காமல் குமாரவேலைப் பின்பற்றிச்சென்று, அவன் வெகுதூரம் செல்லுமுன் அவனைப் பிடித்துவிட்டான். தன் நண்பன் கூறியபடி, அவனை அரைமணிச் சாவகாசம், தன் வசம் எப்படி வைத்துக்கொள்ளுவது என்று யோசித்துக்கொண்டே, கடைசியில், குமரவேலின் சமீபம் வந்ததும், அவனுடைய பெயரைச்சொல்லி அழைக்க, அவ்வேலைக்காரன் திடுக்கிட்டுத் திரும்பினான். ஆனால் அவன் பாலகிருஷ்ணனை நன்கறிந்தவனாகையால், மிகவும் மரியாதையுடன்,

"நமஸ்காரம் ஸ்வாமி! மிகவும் அவசரமாய்ப் போகிறேன். ஏன்? என்னவேண்டும்?" என்று வினவ, பாலகிருஷ்ணன்,

"என்னடா? அவ்வளவு அவசர கார்யம்?" என்றான். குமாரவேல்,

"ஸ்வாமி! உங்களுக்கு விஷயம் தெரியாதுபோலிருக்கிறது! தற்சமயம் என் எஜமானர் கொலைசெய்யப்பட்டுக்கிடக்கிறார்——" என்று மேலே பேசுமுன், பாலகிருஷ்ணன், அவ்விஷயத்தை அறியாதவனைப்போலவும், அதைக் கேட்க மிகவும் வருத்தப்பட்டவனைப்போலவும்,

"அடபாபமே! என்ன அநியாயம்! ஏண்டா குமாரவேல்! நீ சொல்வதை என்னால் நம்பமுடியவில்லையே! இது எப்பொழுது நடந்தது. அவரைக் கொன்றது யார்? இது

யோகினைருக்குத் தெரியுமோ?—" என்று ஒன்றின் பின் ஒன்றாய்ப் பல கேள்விகளைக் கேட்க, குமரவேல், சுபாவத்தில் மிகவும் பேச்சில் பிரியப்பட்டவனுகையால், ஆதியிலிருந்து தன் கதையை ஆரம்பித்தான். இவ்விதம் 20 நிமிஷநேரம் கழிந்தது. அதன் முடிவில், நல்லவேளையாய்ச் சபேசனும் அங்கு வந்து சேர்ந்தான். அவன் குமரவேலைக் கண்டதும், ஆச்சாயப்பட்டவன்போல்,

"ஏனடா! உன்னை அவர் பண்ணையார் அக்கிரஹாரத்திற்கல்லவோ போகச்சொன்னார்? நீ இங்கே என்ன செய்கிறாய்?" என்று கேட்க, குமரவேல் திருடனைப்போல் விழித்தான். ஆனால், அவனுடைய தடுமாற்றத்தைச் சற்றும் லக்ஷியம்செய்யாமல், சபேசன், பாலகிருஷ்ணனைத் தனிமையில் அழைத்துச்சென்று,

"அடே! இங்கே பார்! எனக்குக் கொஞ்சம் அவசர காரியம் இருக்கிறது. தற்சமயம் நீ என்ன செய்யவேண்டுமென்றால், உடனே, திரும்பிச்சென்று, நான் வரும் வரையில், நம் ராஜேந்திரன் தமையன் மூர்த்தியை உன் கண் பார்வையிலேயே வைத்துக்கொள்ளவேண்டும்." என்றான். இதைக் கேட்டதும், பாலகிருஷ்ணனுக்குண்டான ஆச்சரியத்திற்கு அளவில்லை. அவன்,

"என்னடா இது? மலைபோன்ற மனுஷ்யன் கோரமாய்க் கொலைசெய்யப்பட்டுக்கிடக்கிறார். நீ தற்சமயம், நம் தோழனுகிய ராஜேந்திரனுடைய பக்கத்திலிருந்து அவனுக்கு வேண்டிய ஆறுதல்களைச் சொல்லாமல், இப்படிச் சுற்றப்போவது அழகன்று." என்றான். சபேசன்,

"பைத்தியமே! வீண் வம்பு செய்யாதே. நான் தற்சமயம் செய்யும் காரியங்களுக்குக் காரணம் எனக்கு ராஜேந்திரன்மேலுள்ள பிரியமே என்பதை அறிந்துகொள். சரி! உடனே சென்று நான் சொன்னபடி செய். உஷார்!" என்று சொல்லிவிட்டு, மேலும், தாமதிக்காமல், சமீபத்தில் பயந்தபார்வையுடன் நின்றுகொண்டிருந்த குமரவேலை



செய்வாய் என முற்றும் நம்பியே சொல்கின்றேன். கவனமாய்க்கேள். நீ மனப்பூர்வமாய் நேசித்துவரும் பெண்மணியுடன் சேருமுன் அவள் முன்போல் களங்கமற்றவளாக உன்னையே நம்பியும் மனப்பூர்வமாய் நேசித்தும் வருகின்றாளா என அறிந்தே அவளுடன் கூடு. இல்லையேல் அவளைக் கொலைபுரி. இது ஒன்றே நான் உன்னை வேண்டிக்கொள்வது.

**மனிதன்** :—நான் அப்படிக் காண்பேனேயாயின் நீர் சொன்னவிதம் உடனே கொலைபுரியேன். சித்ரவதை செய்தே கொலைசெய்வேன். இதை சத்தியமாக நம்பலாம்.

**ருத்ரவீரன்** :—(தட்டிக்கொடுத்து) நண்பா! நீயே உற்ற தோழன். உனக்கு எந்த ஆடைவேண்டுமோ அதை பொறுக்கிக்கொள்.

*மனிதன் சென்று, தன்னுடைய பழய ஆடை அங்கு வந்திருப்பதைக் கண்டு எடுத்து அதை தரித்துக்கொள்ள கண்ணாடிமுன் செல்கின்றான்.*

**மனிதன்** :—இதென்ன என் மயிர் வெளுத்திருக்கிறது. முகமும் வாட்டமடைந்திருக்கிறது. என்னை என் பெண்சாதி காணின் தனது நாயகனல்ல என்று சொல்ல இடமிருக்குமோ? முகவாட்டம் காலக்கிரமத்தில் சரியாய்விடும். மயிர் நிறைத்ததை என் செய்யலாம்? அதை மாற்றமுடியாதே. உடையையும் அணிந்துபார்ப்போம். (உடையை அணிந்துகொண்டு) ஹா! பழய சுரேந்திரன் மாதிரியே இருக்கின்றேன். ஆனால் மயிர்மட்டும் நிறை. எல்லாம் நன்மைக்கே. இவ்விதமே வெளியே செல்லுமுன் முகத்தை மாற்ற மிக்க உபயோகமாகும் G[illegible] போட்டுக்கொள்கின்றேன்.

[illegible] போட்டுக்கொண்டு.



18770

இப்பொழுது என்னை எளிதில் கண்டுகொள்ள முடியாது. இப்படியே நான் எங்குவேண்டுமென்றாலும் செல்லலாம்.

ருத்ரவீரனிடம் வந்து.

பெரியவரே இவ்வுடையைப் பொறுக்கி எடுத்திருக்கின்றேன். உமக்குச் சேரவேண்டியதென்ன ? தெரிவியும். நான் கொடுக்கின்றேன்.

**ருத்ரவீரன் :**—நண்பரே! இப்பொழுது உம்மைப் பார்ப்பின் பெரிய ராஜவம்சத்தைச் சேர்ந்தவர்போல் தோற்றுகின்றது. போயும் போயும் இவ்வுடையையா எடுக்கவேண்டும் ?

**மனிதன் :**—ஐயா இந்த உடைக்கு என்ன ? ஏதாவது விசேஷம் உண்டோ ?

**ருத்ரவீரன் :**—பாவம்! அச்சீமான் இறந்து இன்னும் நான்கு நாட்கள் கூட ஆகவில்லை. அவன் தந்தை உலகிற்கே ஓர் தந்தையெனலாம். அப்பேற்பட்ட தயாளகுணமுள்ளவர். அவருடைய மகனும் வசித்தவந்த நாட்களில் தந்தையிருந்தபடியே நடந்து கியாதிபெற்றான். இறந்தான். அனாதிப்பிணம்போல் அடக்கம் செய்யப்பட்டான். ஐயோ ! விதிவலிது. அது யாரைவிட்டது ? மேலோர் கீழோர் எனப்பார்க்கும் பாரபக்ஷம் அதற்கு கிடையாது.

**மனிதன் :**—(Aside) ஒருக்கால் என்னைப்பற்றியே சொல்ல வருகின்றானோ? இதுவரை நான் இன்னாரென வெளியிடாதிருந்தது மிகவும் நலமே. இவன் இன்னும் என்ன சொல்லுகின்றானோ கேட்போம். ஏனய்யா ? அவன் அனாதியாகவே இருக்கலாம். பெண்சாதி பிள்ளைகளில்லாமலிருக்கலாம். இதிலென்ன தவறு ? விதியை குறைகூறுவானேன் ?

**ருத்ரவீரன் :**—என்னசொன் [illegible] ருக்கே புதிதாக இருக்கவேண்டும். இப்பொழுது [illegible] பார்



ப்பின் அப்பையன் மாதிரியே அநேகமாக இருக்கின்றது. அவன் சிறு வாலிபன். உமக்கோ தலை நிறைத்திருக்கிறது. மேலும் கண்வியாதிபோல் தோன்றுகிறது. அதனால் கண்ணாடியும் போட்டிருக்கிறீர். அப்புமான் பெயரைச் சொன்னால் அழுகிற குழந்தையும் அளவிலா ஆனந்தங்கொள்ளும். அப்பேற்பட்ட புண்யவானுக்கு எங்கிருந்துதான் கிடைத்தாளோ புண்யவதி. நாயகனிறந்து நான்கு தினங்கள்கூட ஆகவில்லை. என்ன கூத்து, என்ன சிறப்பு, என்ன கேளிக்கை ? புருஷன் எப்பொழுது சாகப்போகின்றான் எனக்காத்திருந்தாளோ எனவும் எண்ணவேண்டியிருக்கிறது. பாவி, சண்டாளி, அவளைக் குறைகூறுவானேன்? நானே ஏமாந்தேனல்லவா கிராதகியினிடம்!

**மனிதன் :**—ஐயா ! ஒரு மனிதர்மீது அபாண்டமான பழியை சுமத்துமுன் நாம் நன்கு அத்தாக்ஷிகள் பெற்றிருக்கவேண்டும். அப்படியில்லையேல் மிகுந்த பாவமும் பழியும் நம்மைச் சாரும். பதட்டத்துடன் பேசாதீர்.

**ருத்ரவீரன் :**—நண்பா ! எனக்குப் பதட்டமே கிடையாது. நீயும் இந்தவூர் என்றாய். நீயே கேள்விப்படுவாய். அப்படி நிச்சயம் எனத்தெரியவரின் நீ என்னசெய்யக்கூடும்?

**மனிதன் :**—அதைத் தற்காலம் என்னால் ஒன்றும் கூறமுடியாது. நீர் கேட்டுக்கொண்டவிதம் என் மனைவி வஞ்சகி எனக் காண்பேனேயாயின் அவளைச் சித்ரவதை செய்து கொலைபுரிவேன். இது சத்யம். உமக்குச் சேரவேண்டியது என்ன ?

**ருத்ரவீரன் :**—ஐயா ! இதற்கு ரூபாய் நாற்பது ஆகின்றது.

**மனிதன் :**—(நூறு ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்து) இதை வைத்துக்கொள்ளும். நான் சென்றுவருகிறேன்.

**ருத்ரவீரன் :**—ஐயா இந்தக்கூறியவாறும் உமக்கு இனாமாக வைத்துக்கொள்ளும். எனக்கென்னவோ ஸ்திரீகளி

டம் அவநம்பிக்கை அதிகம். உமக்கும் அப்படி நேரிடின் இவ்வாயுதத்தை உபயோகித்து என் பழியைத்தீரும். உட்சென்று கொஞ்ச ஆகாரம் அருந்திய பின் போகலாம் வாரும்.

இருவரும் உட்செல்கின்றனர்.

## SCENE III.

மஹேந்திரபுரியில் சுரேந்திரநாத்தின் வீட்டின் தோட்டம்.

பாத்திரம் :—சுரேந்திரநாத் பின்பக்கத்தின் வழியாய் பிரவேசிக்கின்றான். பௌர்ணமிதினம்.

காலம் :—இரவு.

**சுரேந்திரன்** :—திருட்டுத்தொழில் செய்பவன்போல் இரவில் மாறுவேடத்துடனேயே சொந்தவீட்டில் வாசல் வழியாய் நுழையாமல் பின்பக்கமாயும் நுழைகின்றேன். ஆகாதவர் வீட்டிற்கன்றோ கொல்லைப்பக்கமாக பிரவேசிக்கவேண்டுமென்ற பழமொழி. என் வீடு எனக்காகாததா? இதுவரை அப்படியிருந்ததில்லை. இனியும் ஈசன் அவ்விதம் செய்யாமலிருப்பாராக.

சந்திரன் பூர்ண கலையுடன் பிரகாசிப்பதற்கும் தோட்டத்தில் புஷ்பங்கள் மலர்ந்து கம் என்று வாசனை கொடுப்பதற்கும், தென்றல் லேசாக அடிப்பதற்கும் அதோ அந்த இந்திராவதி என்னும் ஆறு கரைபுரண்டு ஓடுவதற்கும் நான் என் பிரியபத்னி இந்திராவுடனிங்கு வந்து உலாவுவேனேயாயின் என் மனம் எவ்வாறு இருக்கும்? இப்பொழுது தான் என்ன? இன்னும் கொஞ்சநேரத்திற்குள் துக்க சாகரத்தில் மூழ்கியிருக்கும் அவளை நான் போய் தேற்றி முகமலர்ச்செய்து அழைத்துவரப் போகின்றேன். பெண்டீரின் காதலின் மஹிமையை அறியாமலன்றோ அன்று எனது நண்பன் இந்திரகுமாரன் கூறியதைக் கேட்காமலும் என் பிதாவின் அகால மரணத்திற்கு ஆளாகவும்



ஆனேன். ஈசா! அதெல்லாம்பற்றி யோஜித்து இப்பொழுது என்ன?

பேச்சரவம் கேட்டு.

இதென்ன? திடீரென இங்கு பேச்சரவம் கேட்கின்றது. யார் வருகின்றனர்? அதோ வெண்மையுடை தரித்து இருவர் வருகின்றனர். நிலவு எதையும் வெண்மையாகக் காட்டும் இயல்புள்ளதன்றோ? யாராக இருக்கலாம்? இங்குதான் ஆசனமிருக்கின்றது. ரோஜா புஷ்பங்களும் இருக்கின்றன. காதலர் இருவர்களின் இதுவே உட்கார தகுதியான இடம். ஒருக்கால் இங்கேவரினும் வருவர். நாம் சற்று மறைவாகவே இருந்து பதட்டமின்னியில் நடப்பதை கவனிப்போம்.

மரத்தின் மறைவில் மறைந்து கொள்கிறான். அவ்விருவரும் அவ்வாசனத்தை நோக்கியே வந்து நிற்கின்றனர். இவர்களுக்குத் தெரியாமல் சுரேந்திரர் வெளி வந்து.

நானென்ன காண்கிறேன்! என் அருமைக் காதலி இந்திராவும் எனது நண்பன் இந்திரகுமாரனையுமன்றோ? ஆஹா இந்தவேளையில் தனியாக என்வரவேண்டும்? ஐயோ? மனம் பதருகின்றதே! அப்பெரியவர் சொன்னது ஞாபகம் வருகின்றதே. ஹா கட்கமே! நீ என்னைவிட்டுப் பிரியாதே. நீயே இனி எனக்கு உற்ற துணை. இதோ நேரில் செல்லட்டுமா? இவ்விதமாகவா இருந்தது? இதற்காகவா இறந்தவன் பிழைத்தேன்?

சற்று யோசித்து.

சீ இதென்ன யோஜனை செய்தேன்? புத்தியை பறிகொடுத்தேன். இந்திரா ஒரு நாளும் அவ்வித ஈனத் தொழிலுக்கு இசையாள். நண்பனும் மேன்மையான

குணம் வாய்ந்தவன். ஐயோ என் யோசனை புத்தியின்றி உண்டாயிற்று. நான் கொடியவன். பாவம்! இந்திரா மிகுந்த துக்கத்தால் பீடிக்கப்பட்டு வருந்தியிருப்பாள். அதைக்கண்டு குழந்தையும் திகிலடைந்திருக்கும். அதை மாற்றவே எனது நண்பன், மிக்க சிரமப்பட்டு, நல்ல காற்று உட்கொள்ளவும் மனம் மாற்றவும் அழைத்து வந்திருப்பான். வேறொன்றுமிராது. அவன் மனம் களங்கமற்றது. நேரில் அவர்கள் முன் தற்பொழுது செல்லட்டுமா? அப்படிச் செய்வேனேயாயின் அவர்கள் ஆனந்தத்திற்கு அளவேயிராது.

*சற்று யோசித்து.*

அப்படி அவர்களுடன் கூடுமுன் நான் அப்பெரியோருக்கு கொடுத்த வாக்கையும் நிறைவேற்றவேண்டும். என்ன சொன்னேன்? என் மனைவி மனம் மாறாமல் கற்பை பரிக்கொடுக்காமலிருக்கின்றாளா எனப் பார்க்கின்றேனென்றேன். அதைப் பார்த்தபின்தான் நான் கூடவேண்டும். ஆகையால் சற்று மறைவாகவே இருந்து அவர்கள் சம்பாஷணையைக் கேட்போம்.

*மறைந்துகொள்கின்றான்.*

**இந்திரகுமாரன் :**—அம்மணி! வீணில் வருந்தவேண்டாம் நடந்தது நடந்துவிட்டது. மாண்டவர் ஒருநாளும் மீளார். தங்களைப்போன்றவர்கள் உடம்பைக் கெடுத்துக்கொள்வது நன்றன்று.

**இந்திரா :**—நண்பரே! இதற்கோ என்னை இங்கழைத்து வந்தீர்? ஐயோ! இன்றிரவு நான் இங்குவரவேண்டுமா? இப்பாவிக்கு இந்நிலவு இனி எதற்கு? ஐயோ! (aside) நான் என் நாதருடன் இங்கு உலாவ வருங்கால் அவர் சொன்ன ஒவ்வொருவார்த்தையும் இப்பொழுது ஞாபகம் வருகின்றதே! தெரியாமல் ஒருநாள் நான் கைகோடாலியால் ஒருபச்சைமரத்தை வெட்டி



விட அவர் மனம் விட்டு கதறியதை நானென்னென்று சொல்வேன்? செடிகொடிகளை மிதிக்க அவருக்கு மனம் வராதே! அப்பேர்ப்பட்ட அவர் சிரமப்பட்டு கண்ணுங் கருத்துமாய் உண்டாக்கிய தோட்டத்தை அனுபவிக்காது எங்கோ சென்றுவிட்டனரே. ஈசா! அவர் அந்தியகாலத்தில் உதவ வொட்டாது அவர் வாக்கன்றோ என்னை தடைசெய்தது. மேலும் குழந்தை லீலாவின் பாசமும் அவரது நண்பன் வாக்கும் தடுத்தது! இனி எதற்கு இவ்வித சுகங்கள் எனக்கு? எங்காகிலும் அடைத்துக்கிடப்போமென்றால் இவர் வந்து குழந்தையின் நிமித்தம் நான் அவ்விதம் இருக்கலாகாது எனத் தடைசெய்கிறார். ஈசா! கணவனிறந்தபின் மங்கை உயிர்வாழலாமா? ஈசா! ஈசா!!

**இந்திரகுமாரன் :**—அம்மணி நீர் உயிர்தரிப்பது இனி குழந்தைக்கன்றோ? குழந்தை சௌக்கியமாயிருக்க தாம் சந்தோஷமாயிருக்க வேண்டாமா? நீர் துக்க மேற்கொண்டவளாயிருப்பின் குழந்தை மிக்கவருந்துவாள். ஆகையால் கவலையை ஒழியும். இனி சுகத்தை மேற்கொள்ளும். கடைசியில் உமது நாதர் உம்மைவிட்டுப் பிரியும் தருணம் என்னசொன்னார் என்பதையும் ஞாபகப்படுத்திக்கொள்ளும்.

**இந்திரா :**—என்னதான் நீர் என்மனத்தைத்தேற்றியும் அது எனது நாதரையே நாடுகின்றது. அவருடைய மேன்மையான குணம் யாருக்கு வரும்? அவருடன் பேசிக்கொண்டிருந்தாலே போதுமே. அன்னாஹாரம் வேண்டாமே. அவர் சிரித்தமுகமும் குளிர்ந்தபேச்சும் உதாரகுணமும் வேறுயாருக்கு கிட்டும்? எதோ பூர்வஜென்மம்செய்த புண்ணியம் அவரை நாதராக அடைந்தேன். இப்பாவிக்கு அப்பேற்பட்ட உத்தமர் கிட்டுமா? அதான் அவர் என்னை விட்டுவிட்டு சென்றார்.

**இந்திரகுமாரன் :**—பிரியே? நான் ஒன்று சொன்னால் நீ ஏதோபேசுகிறாயே. உனக்கு உன்நாதர் சொன்னதை

ஞாபகமூட்டுகின்றேன். கவனமாய்க்கேள். 'இந்திரகுமாரா நீ இங்கேயே இரு. ஒருக்கால் நான் போக நேரிடின் எனது இந்திராவுக்கு தேருதல் சொல்ல வேண்டியவன் நீயே' என்றோ அது மறந்தனையோ?

இந்திரா :—நண்பா வீண்வார்த்தை வளர்த்தாதே. ஏதற்காக என்னை இங்கழைத்துவந்தாய்? சீக்கிரம்சொல். குழந்தை லீலாமணி விழித்துக்கொள்வாள்.

இந்திரகுமாரன் :—பிரியே! நீ உன்நாதரை மணக்குமுன்பேயே நீயும் நானும் பிரிய நேசர்களாய் விட்டதை மறந்தனையோ?

சுரேந்திரன் :—(மறைவிடத்திலிருந்து) என்னசொல்கின்றனர். மனம் பரபரப்படைகின்றது! நானென்ன கேட்கின்றேன். இவனா எனது நண்பன்? அவள் என்ன பதிலுரைக்கின்றாள் கேட்போம்.

இந்திரா :—ஆம். நாம் நேசர்களாய்விட்டோம். அது இல்லையென்று யார்தான் சொல்லக்கூடும்? அதெதற்கு இப்பொழுது?

சுரேந்திரன் :—ஆஹா. மோசம்போனேன். அப்பெரியவர் சொன்னது வாஸ்தவமே. இனி தாமதிக்கலாகாது. கட்கமே! உன்னையே நம்பியிருக்கின்றேன். இப்பொழுதே இவர்களெதிரில் செல்வதா? கூடாது! நான் சொல்லிய பிரகாரமே இவளை சித்ரவதைசெய்தே கொல்லவேண்டும். எதையும் ஆராயாமல் நாம் ஒன்றும் செய்யலாகாது. இனி இங்கிருப்பின் எனக்கு பதட்டம் ஏற்படும். சீக்கிரமே வெளியேறுகின்றேன்.

என்ன அபாக்யவந்தன் நான்? குழந்தையையும் பெண்சாதியையும் காணவந்த எனக்கு இவ்விதமா சம்பவிக்கவேண்டும்? எல்லாம் காலத்தின் கூத்து. இதோ செல்கின்றேன்.



போகும் வழியில் ஓர் ரோஜா இருப்பதைக்கண்டு.

இந்த ரோஜாமாதிரி அவள் ஹிருதயத்தினருகில் என்று ரத்தத்தைக் காண்கின்றேனோ அன்றே என் நாள்.

விரைந்துசெல்கின்றான்.

இந்திரகுமாரன் :—நாமோ நேசர்களாய்விட்டோம். அப்படியிருக்க ஒருவருக்கொருவர் சங்கடப்பட கண்டு சகிக்கலாமா? நீ துக்கமேற்கொண்டிருப்பதைக் காண என் மனம் தாளவில்லையே கண்மணி!

இந்திரா :—நேசரே! என்னென்னவோ பேசுகின்றீரே! அப்படி பேசுதலாகாது. யாருக்கு சங்கடம் நேர்ந்திருக்கின்றது? என் சங்கடம் தீராச்சங்கடம். அதை நீக்க ஒருவராலுமியலாது. நீர் வீணில் சிரமம் மேற்கொள்ளவேண்டாம்.

இந்திரகுமாரன் :—அப்படிக் கூறாதே. நீ மனம்வைத்தால் உன் சங்கடங்கள் பறந்துபோகும். ஏன் கணவனைப் பற்றி இனி நினைக்கவேண்டும்? அவர் எக்காலத்திலாவது இனி திரும்பிவருவாரா?

இந்திரா:—ஐயா இதெல்லாம் என்னபேச்சு? என்ன சமாசாரம் சொல்ல என்னை இங்கழைத்தீர்? விரைவில் கூறும்.

இந்திரகுமாரன் :—நான் சொல்லித்தான் நீ தெரிந்துகொள்ளவேண்டுமோ? இதுவரைதான் உனது நாதர் இருந்து வந்தார். இனிதான் அவர் பயம் கிடையாதே.

இந்திரா :—(காதைப்பொத்திக்கொண்டு) ஐயா! இதென்ன பேச்சு? உம்மை நேசரென எண்ணி மோசம் போனேனே! இதற்காகத்தான் என்னை இங்கு தனியே அழைத்துவந்தீரோ? போதும் உமது நேசம்.

போகபத்தனிக்க, தடுத்து.

இந்திரகுமாரன் :—கண்ணே! என்னைப் பகைவரிடம் காட்டிக்கொடாதே. நான் தற்சமயம் சக்தியிழந்தவனாக இருக்கின்றேன். காட்டிக்கொடாதே கண்ணே!

கிட்டநெருங்கவும், எட்டிப்போய்.

இந்திரா :—ஐயோ! இந்நேரம் என்னைக் காப்பவர் ஒருவருமில்லையா? பாவி ஏமாந்து மோசம்போனேனே? என் செய்வேன்?

இந்திரகுமாரன் :—சரி நீ என்னுடன் வசித்துவர இனி மறுப்பாயாகில் உனக்கு உன் செவிலித்தாய் கொடுத்திருக்கும் உயில்படி சேரவேண்டியது சேராமலும் உன் நாதனின் ஆஸ்திகளும் வாராமலும் ஏற்பாடு செய்துவிடுவேன். ஜாக்கிரதை. உனக்கு வந்திருக்கும் கௌரவம் யாரால் என எண்ணினையா? ஐயோ பாவம் என்று நர்ஸாக இருப்பவளை பெரிய சீமானுக்கு பெண்சாதியாக்கினதை மறந்தனையோ? உன் பூர்வ சரித்திரம் உனக்குத் தெரியாது. எனக்கன்றோ தெரியும். நான் சொல்வதற்கு மறுப்பாயாகில் உன்னை திண்டாடும் நிலைமைக்கு கொண்டுவந்துவிடுவேன். தீர யோசித்து பதிலளி.

இச்சமயம் வெறிகொண்டவன் போல் ஓடிய சுரேந்தர் மறுபடியும் அம்மரத்தடியில் வந்து ஒளிந்து கேட்கின்றான்.

இந்திரா :—ஈசா! என்செய்வேன்? இச்சமயத்தில் இப்பாவியை நேராக விரோதித்துக்கொண்டால் நம் பாடு ஆபத்துத்தான். ஆகையால் இவனுக்கு உட்பட்டவள் போல் நடித்து இவனை தொலைக்கும் மார்க்கம் தேடவேண்டும். அது எளிதில் செய்துவிடலாம். என்ன செய்யலாம்? (யோசித்து)

ஐயா! தெரியாத்தனத்தால் ஏதோ சொல்லிவிட்டேன். அதற்கு மன்னியும். இன்னும் எனது நாதர், உமது



நண்பர், இறந்து நான்கு நாட்கள் பூராவாக ஆகவில்லை. அதற்குள் நாம் கூடி உல்லாசமாக இருப்பின் ஊரார் பலவிதமாக பேசிக்கொள்ள இடம்கொடுக்கும். அவர் இறந்து வருஷதினம் செல்லட்டும். நாமிருவரும் சந்தோஷமாயிருப்பதை குழந்தை கவனிப்பின் அதைவிட அதற்கும் நமக்கும் மானஹீனம் வேறொன்றுமில்லை. ஆகையால் வருஷம் வரை நான் Mourning கொண்டாடுகிறேன். பிறகு நமதிஷ்டப்படியே முடித்துக்கொள்ளலாம்.

இந்திரகுமாரன் :—இப்பல்லவோ எனது இந்திரா நீ! இன்னும் ஒருவருஷகாலம் நானெப்படி பொறுப்பது கண்ணே? இன்று ஒரு இரவு கழிப்பதே மிகவும் கடினம். நானென்னசெய்வேன்?

இந்திரா :—பொறுத்திரும். அவசரப்படாதீர். நேரம் செல்லச்செல்ல என் மனம் குழந்தையைப்பற்றி திகிலடைகின்றது. நான் செல்லவேண்டும்.

இந்திரகுமாரன் :—கண்ணே! எப்படிப் போய்வா என்று சொல்வேன்?

இந்திரா :—என்ன அவசரம்.

போகின்றாள். சற்றுநேரம் சென்று அவனும் போகின்றான்.

சுரேந்திரன் :—(வெளிவந்து) சரி இனி நான் செய்யவேண்டியதும் தீர்மானமாய்விட்டது. இதோ செல்கின்றேன்.

---

# ACT IV.

---

## SCENE I.

மஹேந்திரபுரியில் சுரேந்திரன் வீட்டில் இந்திராவின் அறை.

இந்திரா மிகுந்த துக்கம் மேற்கொண்டவளாய் பின்வரும் வண்ணம் சிந்தித்துக்கொண்டிருக்கின்றாள்.

மாலைநேரம்.

இந்திரா:—என்னைப்போல் துரதிருஷ்டசாலிகள் இருவருமிரார். என்னை ஈன்ற தந்தை தாய் இன்னாரென அறியேன். அன்னியரால் வளர்த்துவரப்பட்டு, தெய்வவசாத், பிறவிச்சிமான் நற்குண நற்சிலர் என் நாதர் சுரேந்திரரை அடைந்தேன். கொடுத்துவைக்கவேண்டாமா? இப்பாவி அதிருஷ்டம் அவரையும் கொன்றது. ஐயோ! நாதரைப் பறிகொடுத்த பாவி எங்காவது அடைத்துக் கிடக்கலாமென்றாலோ! ஈசனுக்கு அதுவும் பொறுக்கவில்லை. எனது நாதர் உயிருடனிருந்த காலை அவருக்கு உயிரோடு உயிரென இருந்துவந்த அவரது நேயர் தற்சமயம் மனம் மாறி காமப்பேய் கொண்டு என்னை விவாஹம் செய்துகொள்ள எண்ண மேலிட்டு வருத்துகின்றார். என் நாதர் சென்றபின் எனக்கெதற்கு சுகம்? நான் என்னதான் மறுதளித்தும், நயவசனங்களால் கூறியும் செவியில் ஏற்றுக்கொள்ளாது ஓரே பிடிவாதமாக ஜாதி முறைமைப்படி மறு விவாஹம் நான் செய்துகொள்ளலாமெனவும், நான் என் வாழ்நாட்களை வீணாட்களாக்காது அவருடன் சகலபோகங்களுடன் வசித்தே வரவேண்டுமெனவும் வற்புறுத்துகின்றார். நாதனிறந்த நான்காந் தினம் நான் தீர்மானம்செய்ததே சரி. இந்தியநாட்டில் பிறந்து தற்கால பிராமணர்களுடன் பழகி எனக்கு மறு விவாஹத்தில் மனம் செல்லவில்லை. ஆகவே நான் நிச்சயித்தபடியே அவரை ஏமாற்றவேண்டும். என்னை, என் நாதரை அடையும்படி உதவிய ஈசனே, இப்பாவி வஞ்சகனிடமிருந்து தப்பும் வழியையும் காண்பிக்கவேண்டும். நான் எனது நாதரிடத்தில் மனப்பூர்வமான அன்புவைத்திருந்ததும் அவர் மனம் கோணாமல் நடந்துவந்ததும் உண்மையாகில் ஈசன் நிச்சயம் என்னை ரக்ஷிப்பார். எல்லாம் வேளைக்குத் தோன்றும் புத்தி.

ஐயோ! பெண் லீலாமணியை சந்தித்து அநேக நாட்களாகின்றன! அவளுக்கு உடம்பு இளைத்துவருகிறது. எனைக் காணவே கூசுகின்றாள். என்னிடம் வந்தால் நான் அழுகின்றேனாம். நாயினா இறந்துவிட்டாரெனவும் கூறுகின்றேனாம். ஆகையால் வரவே மாட்டேனென்கிறாள். அவள் ஓரே பிடிவாதமாக நாயினா திரும்பிவருவார் திரும்பிவருவார் எனவே சொல்லிக்கொண்டிருக்கின்றாள். ஐயோ! அதற்கு மரணமென்றால் என்ன தெரியும்? சிறுவயதில் Wordsworth என்றும் ஆங்கில கவி எழுதிய 'We are seven' என்னும் பாட்டில்



A simple child
That lightly draws its breath
That feels its life in every limb
What should it know of death.

எனப்படித்திருக்கிறேன். அதைத் தத்ரூபமாகக்காண்கின்றேன். குழந்தையின் முகத்தைக் கண்டாவது என் துயரத்தை மாற்றிக்கொள்ளவுமுடியவில்லையே. எங்காவது அவள் சௌக்கியமாயிருந்தால் போதும்! எங்கு நாயினா நாயினா என்று சொல்லி பிராணனைவிடப் போகின்றாளோ என எனக்குப் பயமாக இருக்கின்றது. நல்லவேளையாய் அவளுக்கு நான் ஏற்படுத்தியிருக்கும் இரு தாதிமார்களும் அவளை கண்ணை இமை காப்பதுபோல காத்தும் ரக்ஷித்தும் வருகின்றனர். கணவனிறந்து ஒன்பது மாதங்களாகின்றன! அவரெங்கே இறக்கப்போகிறாரென காத்திருந்த பிரபுக்கள் ஏதோ தப்புப் பத்திரங்கள் பிறப்பித்து ஸர்வ சொத்துக்களையும் தங்களுக்குச் சேரவேண்டிய கடன்களுக்கென்று எடுத்துக்கொண்டனர். இவ்வீடும் கடன்காரர்களுக்கு சேரவேண்டியதே. இந்திரகுமாரர் தாக்ஷண்யத்திற்காக என்னை இங்கு வசிக்க இடம் கொடுத்திருக்கின்றனராம்! எல்லாம் காலத்தின் கூத்து! தீர யோசிப்பின் எல்லாம் இந்திரகுமாரன் சூழ்ச்சியாக இருக்குமோ எனவும் எண்ண இடமிருக்கிறது. அன்று அவன் கூறியவிதம் என்னை பரம தரித்ராஸ்தி

திக்கு கொண்டுவந்துவிட்டு 'என்னை மணப்பின் சுகப்படலாம்' எனச் சொல்ல வழியாயிருக்குமோ? இருந்தாலுமிருக்கும். நான் எந்தநிலை அடைந்தபோதிலும் என் மனதை மாற்றேன். இது திண்ணம்.

இன்னுமேன் பேபர் வரவில்லை? அது வருவதாலன்றோ சற்று வாசித்து நேரத்தைக் கடத்தி துக்கத்தையும் மாற்றச் செய்கின்றேன். என் புருஷனிருந்தகாலை அதில் சமாசாரங்கள் எழுதியுமிருந்தார். நானும் சிற்சில சமயங்களில் கதைகளும் எழுதிவந்தேன். தற்சமயம் என்னை யார் கவனிக்கின்றனர்? ஸ்திரீகளுக்கு புருஷனிறந்தபின் பெருமையேது? செல்வாக்கு ஏது? அவர்களுடன் நசித்துவிடுமென்றோ?

*ஒரு சிறுபெண் 'மஹேந்திரமித்ரன்' என்னும் பேபர் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போகின்றாள்.*

இன்று ஏன் பேபரெடுக்குமுன் எனது இடது நேத்ரம் துடிக்கின்றது? ஏதாவது நற்செய்தி வரப்போகின்றதோ? இப்பாவிக்கு நற்செய்தியும் உண்டா?

*பேபரை எடுத்து வாசிக்கும் தருணம் தடித்த எழுத்துக்கள் இருப்பதைக் கண்டு வாசிக்கின்றாள்.*

> இதுகாறும் அமராபுரிச் சென்று அளவிலா ஐசுவரியம் தேடிய இந்திரநாத் என்னும் ஸ்ரீமான் தன் பிறவி நாடாகிய மஹேந்திரபுரிக்கு அடுத்த திங்கள் வருகின்றார். வரும் சமயம் தனது பிராண நேசர் சுரேந்திரரையே முதலில் சந்திக்க விரும்புகிறார். வெகுகாலம் விட்டு பிரிந்தமையால் தெய்வவசாத் சுரேந்திரர் இல்லையேல் அவர் குடும்பத்தினரையாவது அகத்தியம் பார்க்க வேண்டுமோம். அவர்களுக்கோர் செய்தி தன் தாய்நாடு மிதித்ததும் சொல்லப்போகிறார். தயவுசெய்து சுரேந்திரர் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் கட்டாயமாக திங்களன்று துறைமுகம் சென்று வரவேற்கவும்.



நான் நேரில் செல்லலாமா? நானும் குழந்தையும்தான் என் நாதரைச் சேர்ந்தவர்கள். எனக்கு வெளியே போகவும் மனம் வரவில்லை. என்ன செய்யலாம்?

*இந்திரகுமாரர் வருகின்றார்.*

**இந்திரகுமாரன்** :—இந்திரா! குழந்தை லீலாமணி சௌக்கியமாயிருக்கின்றாளா? அவளுக்கு நாயினை ஞாபகம் மாறியதா? உனக்கு உடம்பு ஒன்றுமில்லாமல் இருக்கின்றனையா? ஏனோ இப்படி உன் வாழ்நாட்களைக் கழிக்கின்றனை? சர்வபோகங்களும் உனக்குக் காத்திருக்க........

**இந்திரா**:—(திரை மறைவிற் சென்று) ஐயா! அனைவரும் சுகமே! வந்ததற்கு ஏதாவது விசேஷமுண்டோ? கடன்காரர்கள் வீட்டைவிட்டு காலிசெய்யச் சொல்லுகின்றனரோ?

**இந்திரகுமாரன்** :—பிரியே! நான் உயிருள்ளவரை அவர்கள் உன்னை வருத்தார்கள். உனது நாதர் சொல்லிச்சென்ற விதம் என்னை நம்பு. நான் உன்னைக் கைவிடேன்.

**இந்திரா** :—ஐயா! இவ்விதம் என்னிடம் உரையாதீர்....... ஐயோ!........

**இந்திரகுமாரன்** :—இந்திரா! இன்று பேபரில் ஓர் செய்தி வந்திருக்கிறதே, கண்டனையா? உனக்கு அந்த இந்திரநாத் யாரெனத் தெரியவருமா? அவரை சந்திக்க நீயும் குழந்தை லீலாமணியும் வருகின்றீர்களா?

**இந்திரா** :—ஐயா! இப்பொழுதுதான் பேபரில் நான் பார்த்தேன். அவர் இன்னாரென எனக்குத் தெரியாது. உமக்குத் தெரியுமா?

**இந்திரகுமாரன்** :—தெரிந்திருக்கலாம். ஆனால் தற்சமயம் ஞாபகம் வரவில்லை. நீங்கள் வருகின்றீர்களா அவரைக் காண?

**இந்திரா** :—ஐயா! அவர் யாரென எனக்குத் தெரியாது. எனது நாதரின் ஆப்த நண்பர் எனக் கூறுகிறார்.

அவர் குணம் நானறியேன். எனது நாதர் இறந்து இன்னும் ஒன்பது மாதங்களாகவில்லை. அப்படியிருக்க அவரை வரவேற்க நான் வரின் என்னை என்ன நினையார்? என்னைப்பற்றி தப்பெண்ணம் உண்டாக இடமுண்டு. ஆகையால் நான் வரமாட்டேன். உமக்கிஷ்டமிருப்பின் நீரே சென்று என் நாதரின் நண்பனெனக் கூறி அவரை வரவேறும். வேறு எங்கும் செல்லலாகாதென நான் கூறியதாகக் கூறி இங்கு நேரே அழைத்துவாரும். இது ஒன்றே தற்சமயம் உம்மை வேண்டிக்கொள்வது.

இந்திரகுமாரன் :—(aside) அச்சீமான் இவளை காணாதிருத்தலே நலம். எங்கு இவளைக் காணின் காதல்கொள்வாரோ எனவும் எனக்கு பயமுண்டு. ஆகையால் முதலில் நானே சென்று வரவேற்கின்றேன்.

பிரியே நீ சொல்லியவாறே நானே போய் வரவேற்கின்றேன். இங்குவர இஷ்டப்படின் நான் அழைத்து வருகின்றேன்.

உன் சொற்படி நடக்க எதிலும் தயார். ஆனால்........

இந்திரா :—ஐயா! என்ன மறுபடியும் ஆரம்பிக்கின்றீர்? உமக்கு வரவேண்டிய சொத்துக்கள் யாவும் வந்துவிட்டதா?

இந்திரகுமாரன்:—இல்லை. மறந்தேன். எனது சிறிய தந்தை பொருமைநாட்டில் மிக்க வியாதியாய் இருக்கின்றாராம். அவர் சொத்துக்குரியவன் நானே. அவருக்கு காலம் கிட்டிற்று எனச் சொல்லலாம். அவரிருப்பிடம் இன்னும் கொஞ்ச நாட்களில் நான் செல்லவேண்டும். இப்பொழுது உன்னைவிட்டு பிரியவேண்டியிருக்கிறதே எனவும் ஏங்குகிறது என் மனம்!

இந்திரா :—கவலைபுறாதீர். நான்தான் பரம தரித்ர நிலையை அடைந்துவிட்டேன். நீராவது அளவிலா ஆஸ்திக்கு உரியவராகும்.



கமலம் பிரவேசித்து குழந்தை கூப்பிடுகிறாள் எனவும்.

சரி குழந்தை கூப்பிடுகிறாளாம். நான் போய்விட்டு வருகிறேன். அவரை அகத்யம் இங்கே அழைத்து வாரும்.

இருவரும் பிரிகின்றனர்.

## SCENE II.

மஹேந்திரபுரியின் சமுத்திரக்கரையோரத்திலுள்ள Sailor Shop.

ருத்ரவீரன் பின்வரும் வண்ணம் யோசித்து நிற்கின்றான்.

காலைவேளை.

ருத்ரவீரன் :—ஆஹா! இன்னும் என் பழிதீர்ந்தபாடில்லை! என்று என்மனம் நிம்மதியடையுமோ நான் ஒன்றும் அறிகிலேன்! என் மனத்தை மாற்ற ஒருவரும் என்னருகிலுமில்லை. இந்த உடைகளையும் சிற்சில சமயங்களில் உடைமாற்ற வரும் மாலுமிகளையும் தவிர வேறொருவரையும் காணேன். சிலமாதங்களுக்குமுன் வந்து உடைமாற்றிய சுரேந்திரன்போலுள்ள பையன் எவ்விதமும் என் மனத்தை திருப்திப்படுத்துவானெனவே எண்ணியிருக்கின்றேன். அவனும் திரும்பி என்னிடம் இதுகாறும் வரவில்லை. அவனைக் கண்டதுமுதல் அவனிடம் ஏதோ ஒருவித அன்பு எனக்கு உண்டாகியிருக்கின்றது. காரணம் என்னவோ? அவன் இருப்பிடம் எவ்விதமாவது கண்டுபிடித்து அவன் வாழ்வை நான் அறியவேண்டும். மேலும் நம்மிடமே அவனை, அவனுக்கிஷ்டமிருப்பின், வைத்துக்கொள்ளலாம். அவனை எங்கென்று தேடுவேன்? அப்பாதகி என்னை விட்டகன்றநாளாக நான் வெளியில் செல்வதையே விட்டுவிட்டேன். என் நேயர்களும் என்னைக் கொலைகாரனென எண்ணியே என்னுடன் நேசங்

கொள்ளவும் பேசவும் அஞ்சுகின்றனர். ஊரிலுள்ள போலீசார்களோ எங்கு சாக்ஷி அகப்படப்போகின்றது என்னை மாட்டலாமென எண்ணமும் கொண்டிருக்கின்றனர். நான் கொலைசெய்திருந்தாலல்லவோ சாக்ஷி அகப்பட? ஏமாத்தினாள் அப்பாதகி! தப்பித்துக்கொண்டனள். அதைப்பற்றி யோசிப்பானேன்?

இத்தருணம் போஸ்டுமான் ஒரு ரிஜிஸ்டர் கவர் கொண்டுவந்து கொடுத்து கையெழுத்து வாங்கிச் செல்கின்றான்.

இதென்ன இன்று எனக்கு ஓர் ரிஜிஸ்டர் கடிதம் வந்திருக்கின்றது! புதுமையிலும் புதுமை! எனக்கு கடிதம் எழுதககூடியவர்கூட இருக்கின்றனரா? பிரித்துப் பார்ப்போம்.

பிரித்து வாசிக்கின்றான்.

பொறுமைநாடு.
1—1—1.

ஐயா! நான் இன்னாரென உங்களுக்குத் தெரியாது. ஆயினும் எனது கடமையை நான் செய்தே தீரவேண்டும். இல்லையேல் ஈசனால் அவரிருப்பிடம் சென்றபின் என்ன தண்டனைக்காளாவேனோ? என்னை நீர் நேரில் காண்பீராயின் அளவிலா ஆக்ரோஷங்கொண்டு கொலைபுரியவும் துணிவீர். இன்னும் அரை வினாடியில் என்னுயிர் போகப்போகின்றது. போகுமுன், உமக்கு நற்செய்தி சொல்லிவிட்டு அச்சந்தோஷத்துடனேயே மாள்கின்றேன்.

என் பெயர் அமரநாத். பேரைக் கேட்டவுடன் இதுகாறும் உமது கவர்ன்மெண்டார் தேடிய கொள்ளைக் கூட்டத்து தலைவன் என ஞாபகம் வரும். திகிலடையாதீர். என்னை ஒருவரும் பிடிக்க முடியாது. ஈசன் வசம் சென்றுவிட்டேனெனவே கொள்ளும். நான்



பெருஞ் செல்வந்தர்களிடமிருந்தும் ராஜாக்களிடமிருந்தும் அளவிலா ஆஸ்திகளையும் பெரும் நகைகளையும் சேர்த்துவைத்திருக்கிறேன். அதன் இருப்பிடம் இதுகாறும் ஒருவரும் அறியார். இது திண்ணம். நான் அவ்வூரைவிட்டு கப்பலேற வரும் சமயம் தற்செயலாய் உமது வீடு வரவும் உமது மனைவி கர்ப்பிணியாயிருந்தவளைக் காணவும், அவள்மேல் ஆசை ஏற்பட ஒருவருமறியாமல் அவளைக் கப்பலுக்கு எடுத்துவர ஏற்பாடு செய்தேன். என் வேலைகளைப்பற்றி நீரே கேள்விப்பட்டிருக்கலாம். கப்பலும் கரையைவிட்டு நகர்ந்தது. அதிலேயே பிரசவமுமானாள், பெண் குழந்தை பிறந்தது. பொறுமைநாடு அடைந்ததும், திடீரென மார்புவலி கண்டு அவள் விண்ணுலகு ஏகினாள். நான் மேற்கொண்ட எண்ணம் கைகூடவில்லை. குழந்தையை எவ்விதமேனும் வளர்க்க எண்ணி ஓர் செவிலித்தாய் ஏற்பாடு செய்து அவளை ஓர் sealed coverஉடன் மஹேந்திரபுரிக்கே அனுப்பித்தேன். பின்பு அவர்கள் சமாசாரம் எனக்கொன்றும் தெரியாது. அக்கவரில் அவள் சரித்திரத்தை விஸ்தாரமாக எழுதியதுடன், அந்த லெட்டர் கொண்டுவந்து கொடுக்கும் பெண்மணியினிடம், உம்மை என் அளவிலா ஆஸ்தியிலிருந்து இருபது லக்ஷம் பொன் கொடுக்கும்படியும் எழுதியிருக்கிறேன். தெய்வவசாத் நீர் அவளைக் காண்பின் உம்முடைய பெண் எனவே கொள்ளும். வீணாக உமது மனையாள்மீது கோபங்கொள்ளாதீர். அவள் கற்புக்கு ஓர் பங்கமும் ஏற்படவில்லை. கடைசியாக நான் உமக்குச் செய்த பெரும் அபராதங்களை மன்னியும். என் ஆஸ்திகள் இருப்பிடம் சுரேந்திரர் வீட்டு சவக்குழியில் பெட்டிகளில் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. அதற்கு ஒற்றையடிப்பாதை உமது வீட்டிற்கு இரண்டு பர்லாங்குக்கு தெற்கேயுள்ள புதரிலிருந்து செல்லும். எல்லாவற்றையும் நீரே ஆண்டு

அனுபவியும். அப்பெண்மணி உயிரோடிருப்பின் உம்மை முப்பத்தைந்தாவது வயதில் வந்து காண்பாள். உமக்கு சந்தோஷம் விளைவித்தேன் என்ற சந்தோஷத்திலேயே நான் உயிர்துறக்கின்றேன்.

அமரநாத்.

ஆஹா! என்னென்ன புதுமைகள்? நாமொன்று நினைத்திருக்க அது வேறாகவன்றோ முடிகின்றது. என் பெண்சாதி குணம் இழிவானதென எண்ணியிருக்க அது முற்றிலும் தவறு. அவள் பலாத்காரமாக எடுத்துச் செல்லப்பட்டாளென இப்பொழுதல்லவோ விளங்குகின்றது. ஈசா! நான் பெருந் தவறிழைத்தேன். உத்தமியைப் பழித்தேன். நான் என்ன பாடு படப்போகின்றேனோ? எனக்கு ஓர் பெண்ணும் இருக்கின்றதா? அவள் எங்கு இருக்கின்றாளோ? சம்சாரசாகரத்தினின்றும் விடுபட்டு இருக்கிறேனென்று எண்ணங்கொண்டிருந்த என்னை மறுபடியும் நன்றாக அமுழ்க்கிவைத்ததே. எவ்விதமேனும் எனது பெண்ணைக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்யவேண்டும். அதற்குமுன் அனாதா ஆஸ்தி இருப்பிடத்தையும் கண்டுகொள்கின்றேன்.

உள்ளே செல்கின்றான்.

## SCENE III.

மஹேந்திரபுரியில் சுரேந்திரர் வீட்டிலுள்ள டிராயிங் ஹால்.

இந்திரநாத் என்ற மாறு பெயர்கொண்ட சுரேந்திரர் பிரவேசிக்கின்றார்.

மாலை நேரம்.

இந்திரநாத்:—நான் இவ்வூரடைந்து சில மாதங்களாயும் என்னை இன்னாரென ஒருவரும் கண்டுகொள்ளவில்லை. சொந்த மனைவிக்கே தெரியவில்லை. அனைவரும் நான் இறந்ததாகவே நினைத்திருக்கின்றனர். வேறு எவ்



விதமாக அவர்கள் எண்ணக்கூடும்? என்னை அனைவரும் பெரிய பிரபுச் சீமானென்றே மதித்து மரியாதை செய்துவருகின்றனர். நான் முன்பு இங்கு வசித்தகாலை என்னுயிர் நண்பனென மதித்த இந்திரகுமாரன் செய்துவந்த மோசங்கள் ஒவ்வொன்றாக இப்பவன்றோ வெளியாகின்றன. என்ன சொல்லினன்? சுரேந்திரன் உயிருடனிருந்தகாலையே இந்திராவுக்கு அவர்மீது நேசமில்லையென்றும் அவரை மணந்ததின் நிமித்தம் சதிபதிகளாக வாழ்ந்து வந்தாளென்றும் உண்மையில் காதல் அவனுக்குத் தன்னிடமிருந்துவந்தது என்றும் கூறினன். அவள் முன்பு என்னிடம் விசுவாசத்துடன் நடந்ததாக எனக்குத் தோன்றவில்லை. ஆனால் அன்று தோட்டத்தில் நடந்தேறிய சம்பாஷணை அவன் சொல்லியதை நம்பச் செய்கிறது. தற்பொழுது இந்திரா, கொலைக்காரி, மிகவும் ஏழ்மையான நிலைமையிலிருக்கிறாள். என் சொந்த வீட்டையே மறுமுறை நான் விலைக்கு வாங்கியிருக்கின்றேன். அவள் மனதைக் கலக்க தினமும் விலையிலா புது புது நகைகளை அனுப்பித்துவருகின்றேன். இன்று அவள் எனக்கு அவள் தாதி வேலைக்காரி கமலம் மூலமாக கடிதம் அனுப்பியிருக்கிறாள். அதன்படியே அவளைப் பார்க்கப் புறப்பட்டு வந்திருக்கின்றேன். என்ன காரணமோ அறிகிலேன்! ஓ! இந்திரகுமாரா! நீ ஓர் வஞ்சகன். அதை நான் நன்றாகக் கண்டுகொண்டேன். உன் சிறிய தந்தையிடம் நீ செல்லுங்காலை என்ன சொல்லிச் சென்றாய்? 'ஐயா! நான் வர சிலகாலமாகும். அதுவரை இந்திரா முதலியவரை மேற்பார்வை பார்த்துவாரும். அவள் என்னை மறு விவாஹம் செய்துகொள்ள வாக்குக் கொடுத்திருக்கிறாள். ஆகையால், அவள் மனதைக் கலைத்து என் விரோதத்தை சம்பாதித்துக்கொள்ளாதீர்' என்றல்லவோ கூறினன். ஆஹா! என் பெண் சாதியையா மணக்கப்போகின்றாய்? நான் பெரும்

மூடன். உலகு இன்னதென்பதையே அறியாமலிருந்தேன். இவனுக்கும் ஓர் பாடம் கற்பிக்கவேண்டும். அவனைக் குறைகூறுவானேன். சொந்தப் பெண்டாட்டிக்கே மனம் மாறியிருப்பின் !

அவள் ஏன் என்னைக் கூப்பிட்டிருக்கின்றாளெனவும் அறிவோம். ஹா ! நான் என்ன கல் நெஞ்சனானேன் ! இப்பொழுது என் சொந்த வீட்டை மறுமுறை நான் இன்னதெனத் தெரியாது சொந்தமாக்கிக்கொண்டு என் பெண்சாதியுடன் அன்னியனைப்போல் பேசப் போகின்றேன். முடியுமானால் என்னையே மணம் புரிய மறுபடியும் கேட்கப்போகின்றேன். அவள் இசையின் கலியாணகாலத்தில் அவளுக்கு ஏற்ற வெகுமதியைக் கொடுத்து என் மனத்தை திருப்தி செய்துகொள்கின்றேன்.

வந்து உட்காருகின்றான். இவன் வரவை அறிந்த கமலா என்னும் **servant maid** தனது எஜமாட்டியினிடம் சென்று வரவைத் தெரிவித்து அழைத்து வருகின்றாள்.

இந்திரா :—(Black mourning garb) கமலா! நாங்கள் மிக்க ரகஸிய சமாசாரம் பேசப்போகின்றோம். ஜாக்கிரதை. எவராயிருப்பினும் உள்ளே விடவேண்டாம்.

கமலா :—ஆஹா அம்மணி.

போகின்றாள்.

இந்திரா :—(திரை மறைவிலிருந்து) ஐயா! என் வேண்டுகோளுக்கிணங்கி என்னை பொருட்படுத்தி வந்ததற்கு மிக்க வந்தனம். முன்பு உம்மை இந்திரகுமாருடன் இங்கு சந்தித்தேன். இரண்டாம் முறையாக தனியே உம்மை இப்பொழுது சந்திக்கும் பாக்யம் பெற்றேன்.



இந்திரநாத் :—உபசார வார்த்தைகளுக்கு மிக்க வந்தனம். என்னைத் தருவித்த காரணம் எதன் பொருட்டு? என்னால் உனக்கு ஆகவேண்டியது ஏதாவது உண்டா? எதுவாயிருப்பினும் உன் பொருட்டு நான் செய்கிறேன். தினமும் நான் கொடுத்துவரும் வெகுமதிகள் வந்துசேர்கின்றனவா? நான் நமது....... உனது குழந்தைக்காக வைரமாலை ஒன்று அனுப்பித்திருந்தேனே சில தினங்களுக்கு முன்பாக. அதைக் குழந்தைக்குப் போட்டனையா? அது எங்கே இப்பொழுது? இந்திரகுமாரன் உங்களை மிக்க ஜாக்கிரதையுடன் பார்த்து வரச் சொல்லியிருக்கிறார். சௌக்கியத்திற்கு ஒன்றும் குறைவில்லையே ?

இந்திரா :—தாங்கள் இப்பாவியை ஒரு பொருட்டாக எண்ணி தினமும் விலையிலா நகைகளை ஏனோ அனுப்பித்துவருகின்றீர் ? என் நாதனின்றி இவைகள் எதற்கு? அதைப்பற்றி கூறி என்ன பயன்? ஐயா! நான் பெரும் பாவி. அதிஷ்டம் என்னுடன் நிற்கலாகாதா? என்னைத்தான் அடைத்துப் போட்டாய்விட்டதே. காலை முதல் குழந்தை லீலாமணியை வீட்டில் காணோமாம். நேற்று இரவு வீட்டில் படுத்திருந்தாள். இதற்கு நானென்னையா செய்வேன்!

அழுகிறாள்.

ஐயோ! என் நாதன் சென்றபிறகு அவர் அறிகுறியாயிருக்கும் குழந்தையின் பொருட்டாவது ஜீவிக்கலாமென இருந்தேனே! என் நாதனிறந்த பிறகு அவருக்கு சொந்தமானவையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக என்னைவிட்டு நீங்கியது. கடைசியில் பாக்கி நின்ற குழந்தையும் நீங்கவேண்டுமா? அவள் எங்கு சென்றனளோ? வீட்டைவிட்டு வெளியே போகாதவளாயிற்றே. யார் எடுத்துச் சென்றனரோ ? ஒருக்கால் நகைக்காசைப்பட்டு யாரேனும் [illegible] குழந்தையை தூக்கிச் சென்றிருப்பார்களோ ? ஐயோ!

அவர்கள் வசம் அகப்பட்டு அவள் என்ன அவஸ்தைக் காளாகின்றனளோ? உயிருடன்தான் இருக்கின்றனளோ அல்லது அப்பாவிகளால் கொலையும் செய்யப்பட்டனளோ? ஐயோ! இப்பாவி அவளைப் பிரிந்து என்ன செய்வது என்று ஒன்றும் தோன்றாமல் அவஸ்தைப்பட்டுக்கொண்டு நிற்கின்றேன். இச்சமயம் எனக்கு உதவிபுரியமாட்டீரா? எப்படியாகிலும் நான் அவளைக் காணவேண்டும். ஐயா! இத்துயரம் என்னால் சகிக்கக்கூடவில்லை. நீர் யாராயிருப்பினும் சரி. உம்மை என் கலிதீர்க்க வந்த பரமமூர்த்தி என பாவித்து சரணமடைகின்றேன்.

*திரை மறைவிலிருந்து வெளி வந்து நமஸ்கரிக்கின்றாள்.*

நீர்தான் இனி என்னை ரக்ஷிக்கவேண்டும். குழந்தையை எவ்விதத்திலும் கண்டுபிடித்து அவளை என்னுடன் கூட்டிவைக்கவேண்டும்.

*எழுந்திருக்கின்றாள்.*

இந்திரநாத் :—(aside) என்ன! இவள் பேசுவதைப் பார்த்தால் நாம் இவளைப்பற்றி எண்ணியிருப்பது முற்றிலும் தவறாக இருக்குமோ என எண்ணவும் இடமுண்டாகின்றது. உடனே முற்றிலும் நம்பலாகாது. என் மனத்தையும் திடமாகவே வைத்துக்கொண்டு இன்னமும் பேசுவோம்.

(பிரகாசமாய்) பெண்ணே! உனக்கென்ன குறை! இப்பொழுது நேர்ந்திருப்பவையெல்லாம் கஷ்டங்களென்று எண்ணினாய்? உனக்கு சுகமே. என் பிராண நேசன் இந்திரகுமாரன் சீக்கிரமே வருவதாக தந்தி இன்று வந்திருக்கிறது. அவன் வரும் சமயம் உன்னை அழைத்துக்கொண்டு கடற்கரைக்கு வரச்சொல்லியிருக்கிறான். அவன் வந்ததும் சீக்கிரமே விவா[illegible] வேண்டிய ஏற்பாடுகளும் நடந்து வருகின்றன. [illegible]க்கு நிகர் ஐசுவர்யவந்தர் இந்

188770